சேசுவின் இராச்சியம் வரும்படியாக மாதாவின் இராச்சியம் வருக!
- அர்ச். லூயிஸ் மரிய மோன்போர்ட்



"நீயாவது எனக்கு ஆறுதலளிக்க முயற்சி எடு."

மாதா பரிகார மலர்

செப்டம்பர் & அக்டோபர் – 2023
மலர் 44 இதழ் 9 & 10
வருடச் சந்தா ரூ. 150.00
தனிப்பிரதி ரூ.20.00



"ஒவ்வொரு நாளும் ஜெபமாலை ஜெபிக்கிறவன் ஒருபோதும் பதிதனாக மாட்டான். பசாசினால் வழிதவறிப் போகவுமாட்டான்."

- அர்ச். லூயிஸ் மரிய மோன்போர்ட்

அழிகின்ற உலகமே, உன் அன்னையிடம் வா!

கைப் புண்ணுக்குக் கண்ணாடி தேவையில்லை. உலகம் அழிந்து வருகிறதென்பதற்கு நிரூபணம் வேண்டியதில்லை. உலகத்தைக் காப்பாற்றுவதுதான் இப்பொழுது நம் கடமை-யாயிருக்கிறது.

விஞ்ஞானிகளால் உலகத்தை அழிக்க முடியும்; காப்பாற்ற முடியாது. பொருளாதார நிபுணர்களால் கணக்குப் போட முடியும்; உலகத்தை வளப்படுத்த முடியாது. சமூகவாதிகளால் சண்டைகளை மூட்ட முடியும்; சமாதானத்தைக் கொண்டு வர முடியாது.

ஏனென்றால், இவையெல்லாம் மனிதனைத் தாண்டி நிற்கும் அன்பினால் மட்டுமே கூடும். கடவுள் சூரியனைப் போல, நாம் தாங்க முடியாத அன்பாயிருக்கிறார். மாதா சூரியனைப் பிரதிபலிக்கிற நிலவைப் போல நாம் எளிதில் அணுகக்கூடிய அன்பாயிருக்கிறார்கள். ஆதலால் உலகத்தை மாதாவிடம் கொண்டு வரவேண்டும்; அது காப்பாற்றப்படுவதற்கு.

திருச்சபை

உலகத்தின் கதியை நிர்ணயிப்பது திருச்சபையே. ஆனால் இன்று சாத்தான் திருச்சபையை அலங்கோலமாக்கியுள்ளது. அதை யாரும் காட்டித் தரத் தேவையில்லை. கத்தோலிக்க திருச்சபையே பதிதங்களைத் தன் மடிமேல் அமர்த்தியபின் குழப்பத்திற்கு வேறு காரணம் அவசியமில்லை. "உரோமாபுரி தன் விசுவாசத்தை இழக்கும்; அது அந்திக் கிறீஸ்துவின் ஆசனமாகும்" என்னும் சலேத் மாதாவின் தீர்க்கதரிசனம் நடைமுறையாகிக் கொண்டிருக்கிற காலம் இது. திருச்சபை எவ்வழியோ, உலகம் அவ்வழி. ஆதலால் இன்று திருச்சபை காப்பாற்றப்படுவது இன்றியமையாத் தேவையாகிறது.

திருச்சபையைக் காப்பாற்ற

திருச்சபையைக் காப்பாற்ற தேவ தாயால் மட்டுமே முடியும். அதை எந்த மனிதனாலும் செய்ய முடியாது. "உங்களால் ஒன்றும் செய்ய முடியாது; நான் மட்டுமே உங்களுக்கு உதவ முடியும்" என்று பாத்திமாவில் மாதா கூறினார்கள். தாங்கள் திருச்சபையைத் தங்கள் எல்கைகளிலாவது காப்பாற்றி விடலாம் என்று சிலர் தவறாக நினைக்கிறார்கள். திருச்சபையில் புகுந்துள்ள சீர்கேடுகளை எடுத்துக் காட்டி மக்களுக்கு விழிப்பூட்டுவதால் அதைச் செய்யலாம் என்று கருதுகிறார்கள். உரோமையே விசுவாசங் கெட்டு விட்ட நிலையில் கீழ்மட்டக் குற்றங்களைச் சுட்டிக்காட்டி என்ன பயன்? அதனால் குழப்பம் அதிகரிக்கவே செய்யும். ஒரே வழி மாதாவிடம் வருவதுதான். திருச்சபையின் சமாதானத்திற்கு மாதா கேட்பது அவர்களின் மாசற்ற இருதயத்திற்கு நிந்தைப் பரிகாரம் செய்வதைத்தான். ஆகவே நாம் மாதாவை மனதார நேசித்து, அந்த அன்பினால் மரியாயின் மாசற்ற இருதயத்திற்குப் பரிகாரம் செய்ய வேண்டும். அப்போது, திருச்சபை சமாதானத்தை மாதாவின் மாசற்ற இருதயத்தின் வழியாகப் பெற்றுக்கொள்ளும்.

எனவே, தேவமாதாவுக்கு ஆறுதல் தரக்கூடிய அவர்களின் பிள்ளைகள் அனைவரும் ஒரே மனதோடும், ஒருமித்த கருத்தோடும் அதிகமாக ஜெபமாலையைச் ஜெபித்து பரித்தியாகம் செய்து அவர்களின் மாசற்ற இருதய வெற்றியைத் துரிதப்படுத்துவோமாக. இந்த வெற்றியின் மூலம் சேசுவின் அரசாட்சி மாதா வழியாக திருச்சபையில் ஸ்தாபிக்கப்படும் காலத்தை நாம் விரைவில் எதிர்பார்க்கலாம்.

ஜெபமாலை பக்தி

(பாப்பரசர் பதின்மூன்றாம் சிங்கராயரின் சுப்ரேமி அப்போஸ்தோலாத்துஸ் ஒஃபீஸியோ என்னும் சுற்றுமடல்)

இன்று திருச்சபையைத் துன்புறுத்தும் பேரழிவுகள் பெரிதாயிருப்பதால், அதன் நலனை அக்கறையோடு பாதுகாக்கும்படி நமது அப்போஸ்தலிக்க ஆசனமும், இக்காலங்களின் மிகவும் கடினமான நிலையும் நம்மைத் தினமும் எச்சரிக்கின்றன. ஆகவே, **திருச்சபையின் உரிமைகளைப் பாதுகாக்கவும், அது எதிர்கொள்ளும் ஆபத்துக்களை விலக்கவும்... தேவமாதாவால் ஆதரிக்கப்படுவதைவிட வேறு நிச்சயமான, அதிக பயனுள்ள வழி வேறு எதுவுமில்லை என்று நாம் நம்புகிறோம்...** *பரிசுத்த ஜெபமாலை பக்தியின் வழியாகக் கிறீஸ்தவ மக்கள் பெற்றுக்கொண்ட மாபெரும் நன்மைகளை மனதில் கொண்டு, கத்தோலிக்க உலகம் முழுவதும் திவ்ய கன்னிகையிடம் இதே பக்தியைக் கொண்டிருக்க வேண்டும். திருத்தாயாரின் மன்றாட்டின் வழியாக, அவர்களுடைய திவ்ய சுதன் சாந்தமடைந்து, நம்மைத் துன்புறுத்தும் தீமைகளிலிருந்து நம்மை விடுவிப்பார் என்று நாம் நம்புகிறோம்...*



ஆபத்துக்களும், குழப்பமும் சூழும்போதெல்லாம் மாமரியிடம் தஞ்சமடைவதும், அவர்களுடைய தாய்க்குரிய நன்மைத்தனத்தில் சமாதானத்தைத் தேடுவதும் கத்தோலிக்கர்களின் வழக்கமாக இருந்து வந்துள்ளது. கத்தோலிக்கத் திருச்சபை நீதியான முறையில் தேவமாதாவில் எப்போதும் தன் நம்பிக்கையை வைத்து வந்துள்ளது. மனித இரட்சணியப் பணியில் தன் திருக்குமாரனோடு இணைந்து உழைத்த திவ்ய கன்னிகை, சகல சம்மனசுக்களையும், அர்ச்சியசிஷ்டவர்களையும்விட அவருடைய தயவை அதிகமாகப் பெற்றிருக்கிறார்கள். தன்னைத் தேடுபவர்களுக்கு உதவுவதே அவர்களுடைய மிகப்பெரும் மகிழ்ச்சியாக இருப்பதால், கத்தோலிக்கத் திருச்சபை விரும்பும் காரியங்களைப் பெற்றுத் தர அவர்கள் திருவுளமிரங்குவார்கள், அதில் அக்கறையும், கவலையும் கூட கொள்வார்கள் என்பதில் எந்த சந்தேகமும் இருக்க முடியாது.

பரிசுத்த திருச்சபை தப்பறையாலோ, ஒழுக்கக் கேட்டாலோ, வலிமையுள்ள எதிரிகளின் தாக்குதலாலோ ஆபத்துக்கு உள்ளாகும் போதெல்லாம், தேவமாதாவின் மேல் பக்தி போராடும் திருச்சபையில் வேறு எப்போதையும் விட அதிகமாகச் சுடர்வீசிப் பிரகாசித்துள்ளது. இதன் மூலம் திருச்சபைக்கு மாமரி கடவுளிடமிருந்து பெற்றுத் தந்த சமாதானத்திற்கு வரலாறும், திருச்சபையின் வரலாற்றுப் பதிவுகளும் எண்ணற்ற முறைகளில் சான்று பகர்ந்துள்ளன. இதனாலேயே மாமரி கிறீஸ்தவர்களின் சகாயம், கஸ்திப்படுவோரின் தேற்றரவு, சமாதானத்தின் இராக்கினி, ஜெய இராக்கினி என்றெல்லாம் போற்றப்படுகிறார்கள். இவற்றில் ஜெபமாலையின் இராக்கினி என்னும் பட்டம் மிகவும் முக்கியமானது. ஆல்பிஜென்ஸியப் பதிதர்களால், பரிசுத்த திருச்சபை எவ்வளவு பெரிய துன்பங்களை அனுபவித்தது என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்... இவர்கள் படுகொலைகளையும், அழிவையும் கொண்டு மக்களை அடக்கியாண்டார்கள். நம் இரக்கமுள்ள தேவனோ, இந்தக் கொடிய எதிரிகளுக்கு எதிராக, அர்ச். சாமிநாதரையும், அவருடைய சபையையும் எழுப்பினார். இவர் பரிசுத்த ஜெபமாலை பக்தியின் மூலம் கத்தோலிக்கத்

திருச்சபையின் எதிரிகளைத் தாக்கி வெற்றி பெற்றார். தேவ ஏவுதலாலும், வரப்பிரசாதத்தாலும் வழிநடத்தப்பட்டு, ஒரு மிகுந்த வலிமை கொண்ட போராயுதத்தைப் போல், இந்த பக்தி எதிரிகளின் துணிவையும், மூடத்தனமுள்ள அவபக்தியையும் அழித்துவிடும் என்று அவர் கண்டார். உண்மையிலும் அதுதான் நடந்தது. இந்த ஜெப முறை மூலம், தேவ பக்தியும், விசுவாசமும், ஐக்கியமும் திரும்பி வரத் தொடங்கின, பதிதர்களின் திட்டங்களும், தந்திரங்களும் நொறுங்கி விழுந்தன. பரதேசிகளாய்த் திரிந்தவர்கள் இரட்சணிய வழிக்குத் திரும்பினர்; ஜெபமாலை ஏந்திய கத்தோலிக்கர்களால் அவபக்தியாளர் அடக்கி ஒடுக்கப்பட்டனர்.

துருக்கியர்களின் பெரும்படைகளால் ஐரோப்பா முழுவதும் அச்சுறுத்தப்பட்ட 16-ஆம் நூற்றாண்டிலும், இந்த பக்தியின் வல்லமை அற்புதமான முறையில் வெளிப்பட்டது. அச்சமயத்தில் பாப்பரசர் அர்ச். 5-ஆம் பத்திநாதர், கிறீஸ்தவ அரசர்களின் ஒற்றுமையைத் தூண்டியபின், கத்தோலிக்கர்கள் ஜெபமாலை வழியாகக் கடவுளின் மகா வல்லமையுள்ள மாதாவை நோக்கித் திரும்பும்படி அவர்களைத் தூண்டினார். இவ்வாறு கத்தோலிக்கரின் மனங்களும் இருதயங்களும் அவரைச் சுற்றி ஒன்றுகூடின. தங்கள் விசுவாசத்திற்காகவும், நாட்டிற்காகவும் தங்கள் உயிரையும், இரத்தத்தையும் பலியாக்க ஆயத்தமாயிருந்த கிறீஸ்துநாதரின் பிரமாணிக்கமுள்ள போர்வீரர்கள் கொரிந்த் வளைகுடா அருகில் தங்கள் எதிரியை எதிர்கொள்ள வீரத்தோடு புறப்பட்டுச் சென்றனர். போரில் கலந்துகொள்ள முடியாதவர்கள், ஜெபமாலையைக் கொண்டு தேவமாதாவைத் திரும்பத் திரும்பத் துதித்துப் போற்றும் பக்தியுள்ள போரில் ஆர்வத்தோடு பங்கேற்றார்கள். அன்று கிறீஸ்தவப் படை எந்தச் சேதமுமின்றி, மாபெரும் வெற்றி பெற்றது. எதிரிப்படை வேரோடு அழித்து ஒழிக்கப்பட்டது. இந்த மாபெரும் தேவ வரப்பிரசாதத்தின் நினைவை என்றும் நினைவுகூரும் படியாக, அதே பரிசுத்த பாப்பரசர் ஜெய இராக்கினியின் திருநாள் ஒன்று இந்த வெற்றியின் நாளில் கொண்டாடப்பட வேண்டுமென்று விரும்பினார். 13-ஆம் கிரகோரியார் இந்தத் திருநாளை ஜெபமாலை மாதா திருநாள் என்று பிரகடனப்படுத்தினார். இதே விதமாக, 18-ஆம் நூற்றாண்டில் கிறீஸ்தவர்கள் பன்னோனியாவின் தேமேஸ்வரிலும், கோர்ஃபுவிலும் துருக்கியர்மீது பெரும் வெற்றிகளைப் பெற்றார்கள். இந்த இரு வெற்றிகளும் திவ்ய கன்னிகையின் திருநாட்களிலேயே நிகழ்ந்தன, பொது ஜெபமாலை பக்திமுயற்சிகள் இந்த வெற்றிகளுக்கு அடிப்படையாக இருந்தன. நம் முன்னவரான 11-ஆம் கிளமெண்ட் தேவ அன்னைக்கு நன்றியறிதலாக, திருச்சபை முழுவதிலும் ஒவ்வொரு ஆண்டும் பரிசுத்த ஜெபமாலை மாதா திருநாள் ஒன்றின் மூலம் தேவமாதா விசேஷமான முறையில் மகிமைப்படுத்தப்பட வேண்டுமென்று ஆணை பிறப்பித்தார்.

ஆகவே, இந்த ஜெப முறை திவ்ய கன்னிகைக்குத் தனிப்பட்ட முறையில் பிரியமானது; அது திருச்சபையையும், சகல கிறீஸ்தவர்களையும் பாதுகாக்கும் வல்லமையுள்ள ஆயுதமாக இருக்கிறது. நம் முன்னவர்களும் தங்கள் பரிந்துரைகளின் மூலம் இந்த பக்தியைப் பரப்புவதைத் தங்கள் நோக்கமாகக் கொண்டிருந்தார்கள். இவ்வாறு நான்காம் உர்பன், **"ஜெபமாலை தினமும் கிறீஸ்தவ வேதத்திற்குப் புதிய வரப்பிரசாதங்களைப் பெற்றுத் தருகிறது"** என்று அறிக்கையிட்டார். பாப்பரசர் நான்காம் சிக்ஸ்துஸ், இந்த ஜெப முறை "கடவுளுடையவும், திவ்ய கன்னிகையினுடையவும் சங்கை வணக்கத்தை அதிகரிக்கிறது, வரவிருக்கும் ஆபத்துக்களை விலக்குவதற்கு மிகப் பொருத்தமான ஆயுதம் இது" என்றார். பத்தாம் சிங்கராயர்: "பதிதர்களையும், பதிதங்களையும் எதிர்ப்பதற்காகவே இந்த பக்தி தரப்பட்டுள்ளது" என்றார். அர்ச். ஐந்தாம் பத்திநாதர், "இந்த பக்தியால் விசுவாசிகளின் தியானங்கள் அதிகமாய்ப் பற்றியெரியத் தொடங்குகின்றன. அவர்களுடைய ஜெபங்கள் அதிக பக்தியுருக்கமுள்ளவையாகின்றன, அவர்கள் திடீரென புதிய மனிதர்களாக மாறுகிறார்கள்; தப்பறையின் இருள் சிதறடிக்கப்படுகிறது, கத்தோலிக்க விசுவாச ஒளி மீண்டும் எங்கும் பிரகாசிக்கிறது" என்றார். இறுதியாக, 13-ஆம் கிரகோரியார், "ஜெபமாலை பக்தி,

கடவுளின் கோபத்தை அமர்த்தவும், திவ்ய கன்னிகையின் பரிந்துரையை இரந்து மன்றாடவும் அர்ச். சாமிநாதரால் ஏற்படுத்தப்பட்டது" என்று அறிக்கையிடுகிறார்...

ஆகவே, அதிகாரபூர்வமான ஜெபங்களை ஏற்படுத்தி, ஜெபமாலையில் அவற்றைச் சொல்வதன் மூலம் மரியாயின் திருக்குமாரனிடமிருந்து, இன்றைய ஆபத்துகளுக்கு எதிராக உதவியைப் பெற்றுக்கொள்ள இதுவே மிகச் சரியான நேரம். இன்று திருச்சபை அனுதினமும் தப்பறைக்குத் திறப்பாயுள்ளது; கிறீஸ்தவ பக்தியும், பொது ஒழுக்கமும், விசுவாசமும்கூட பெரும் ஆபத்துக்கு உள்ளாக்கப்படுகின்றன. கிறீஸ்துநாதரின் திரு இரத்தத்தால் மீட்கப்பட்ட ஏராளமான ஆத்துமங்கள் தப்பறையின் சூறாவளியால் இரட்சணியத்திடமிருந்து பறிக்கப்பட்டு, நித்திய நரக பாதாளத்திற்குள் இறங்குவது மிகக் கொடிய வேதனை தரும் காட்சியாக இருக்கிறது. ஜெப மாலையை அர்ச். சாமிநாதர் தந்த காலத்தைப் போல் இன்றும் தேவ உதவி நமக்கு மிகுதியாய்த் தேவைப்படுகிறது.

ஆகவே, சகல கிறீஸ்தவர்களும் பொதுவிலோ, தனிமையிலோ, தங்கள் சொந்த வீட்டிலும், குடும்பத்திலுமோ ஜெபமாலையை பக்தியோடும், அனுதினமும் ஜெபிக்க வேண்டுமென்றும், அக்டோபர் முழுவதும் ஜெபமாலை இராக்கினிக்கு அர்ப்பணிக்கப்பட வேண்டுமென்றும் நாம் விரும்புகிறோம். கத்தோலிக்க உலகம் முழுவதிலும், இந்த (1883-ஆம்) ஆண்டில், ஜெபமாலை பக்தி அதிகாரபூர்வமாக அனுசரிக்கப்பட வேண்டுமென்று நாம் ஆணையிடுகிறோம். ஆகவே, அக்டோபர் 1 முதல், நவம்பர் 2 வரை, எல்லாப் பங்கிலும், திவ்ய கன்னிகைக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு சிற்றாலயத்திலும், 53 மணி ஜெபமாலையும், தேவமாதா பிரார்த்தனையும் சொல்லப்படுனவாக. மக்கள் இந்த பக்தி முயற்சிகளில் அடிக்கடி பங்குபெற வேண்டுமென்றும்... இந்த பக்தி அனுசரிக்கப்படும் நாட்களில், ஜெபமாலை பக்த சபைகள் நகர வீதிகள் வழியாகப் பவனியாகச் சென்று, தங்கள் பக்தியை வெளிப்படுத்த வேண்டுமென்றும் நாம் விரும்புகிறோம்....

(இந்த நாட்களில்) பொது ஜெபமாலையிலும், பிரார்த்தனையிலும் பங்குபெற்று, நமது கருத்துக்காக ஜெபிப்பவர்கள் அனைவருக்கும், இதை அவர்கள் செய்யும் ஒவ்வொரு முறையும், ஏழு வருடம், ஏழு மண்டல ஞானப் பலனை நாம் வழங்குகிறோம். இப்படி பொது ஜெபங்களில் பங்குபெற இயலாதவர்கள் தனிமையில் இந்த பக்திமுயற்சிகளைச் செய்து, நம் கருத்துக்காக ஜெபித்து, இதே பலனைப் பெற்றுக்கொள்ளலாம். மேலும் இந்நாட்களில், ஆலயங்களில் பொதுவாகவோ, (நியாயமான காரணத்தால் இதைச் செய்ய முடியாதபோது) இல்லத்தில் தனியாகவோ இந்த பக்திமுயற்சிகளைக் குறைந்தது இரு முறையாவது செய்பவர்களுக்கும், நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து, திவ்ய நன்மை உட்கொள்பவர்களுக்கும் பாப்புத்துவ ஞானப் பலனின் வடிவத்தில், கட்டிக்கொள்ளப்பட்ட எல்லாப் பாவங்களையும், அவற்றிற்குரிய தண்டனைகளையும் நாம் மன்னிக்கிறோம். மேலும், ஜெபமாலை மாதா திருநாளன்றோ, அல்லது அதன்பின் வரும் எட்டு நாட்களுக்கு உள்ளாகவோ, பாவசங்கீர்த்தனம் செய்து, திவ்ய நன்மை உட்கொண்டு, ஏதாவது ஓர் ஆலயத்தில் நம் கருத்துப்படி, திருச்சபையின் அவசரங்களுக்காகக் கடவுளிடமும், திவ்ய கன்னிகையிடமும் ஜெபிப்பவர்களுக்கு நாம் ஒரு பரிபூரண பலனை வாக்களிக்கிறோம்....


திவ்ய கன்னிமரியாயின் வழியாகக் கடவுள்தாமே பரலோக ஆசீர்வாதத்தின் ஒவ்வொரு கொடையையும் தந்தருள வேண்டுமென்று மிகுந்த ஆர்வத்தோடு அவரை நாம் இரந்து மன்றாடுகிறோம். நாமும், குருநிலையினராகிய உங்களுக்கும், உங்கள் பொறுப்பில் விடப்பட்டுள்ள மக்களுக்கும், நம் அப்போஸ்தலிக்க ஆசீர்வாதத்தை வழங்குகிறோம்.

உரோமையிலுள்ள அர்ச். இராயப்பர் பேராலயத்தில், 1883, செப்டம்பர் 1 அன்று, நம் பாப்புத்துவத்தின் ஆறாம் ஆண்டில் (இந்தச் சுற்றுமடல்) வழங்கப்படுகிறது.

பதின்மூன்றாம் சிங்கராயர்.

லூர்துபதியில் தேவமாதாவே வெளிப்படுத்திய அவர்களுடைய தெய்வீகம்

1958, மார்ச் 25, மங்கள வார்த்தை திருநாளன்று நிகழ்ந்த பரிசுத்த அமல உற்பவியின் பதினாறாவது காட்சியைப் பற்றி அர்ச். பெர்னதத்தம்மாள் இப்படி எழுதுகிறாள்: “இரண்டு வாரங்களாக, நான் ஒவ்வொரு நாளும் அந்தப் பெண்ணரசியிடம், அவர்கள் யார் என்று கேட்டுக் கொண்டேயிருந்தேன். என் கேள்விகளுக்கு அவர்கள் ஒரு புன்னகையை மட்டுமே பதிலாகத் தந்துகொண்டிருந்தார்கள். இறுதியாக, நான்காவது முறையாக, (இந்தக் காட்சியில்) நான் மீண்டும் அவர்களிடம் கேட்டபோது, அவர்கள் புன்னகைப்பதை நிறுத்தி விட்டார்கள். தன் திருக்கரங்களைத் தன் நெஞ்சுக்குக் குறுக்காக சார்த்திக்கொண்டு, வானத்தை அண்ணார்ந்து பார்த்தபடி, ‘**நாமே அமல உற்பவம்!**’ (“Je suis L'immaculee Conception)” என்று அறிவித்தார்கள்.



நான் பங்குச் சுவாமியாரிடம் சென்று இதைக் கூறியபோது, அவர் அதிர்ச்சியடைந்ததைக் கண்டேன். திரும்பத் திரும்ப அவர் என்னிடம் நான் சொல்வது நிச்சயம்தானா என்று கேட்டார். நான் ஆம் என்றேன். ஏனெனில் இந்த வார்த்தைகளை மறந்து விடாமல் இருப்பதற்காக, நான் அவற்றை வழி நெடுகத் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டே வந்திருந்தேன்.”

பங்குக் குருவானவர் இப்படி அதிர்ச்சியடைந்ததற்கும், மீண்டும் மீண்டும் அவர் புனிதையிடம் கேட்டு இந்தத் திருப்பெயரை உறுதிப்படுத்திக்கொண்டதற்கும் காரணம் என்ன? நான்கு வருடங்களுக்கு முன்புதான் *1854,* டிசம்பர் 8 அன்று, பாப்பரசர் ஒன்பதாம் பத்திநாதர், “மாமரி தன் உற்பவத்தின் முதல் கணத்திலிருந்தே ஜென்மப் பாவமின்றி பாதுகாக்கப்பட்டார்கள்” என்ற வார்த்தைகளில் திவ்ய கன்னிகை பாவ மாசின்றி அமல உற்பவியாக உற்பவித்தார்கள் என்ற சத்தியத்தைப் பிரகடனம் செய்திருந்தார். அப்படியிருக்க, இந்தத் திருப்பெயரைக் கேட்டுப் பங்குக் குரு அதிர்ச்சியடைந்தது ஏன்?

மகா பரிசுத்த கன்னிகை, தான் பாவ மாசின்றி உற்பவித்ததைக் குறிக்கும் வகையில் “நாமே அமல உற்பவி” (I am the One Immaculately conceived) என்று கூறவில்லை. மாறாக, “நாமே அமல உற்பவம்” (I am the Immaculate Conception) என்று அறிவித்தார்கள். இங்கே நம் திவ்ய அன்னை ஓர் உரிச்சொல்லைப் (an adjective) பயன்படுத்துவதற்குப் பதிலாக, ஒரு பெயர்ச்சொல்லைப் (a noun) பயன்படுத்துவதைக் கவனியுங்கள். உண்மையில், ஒரு வகையில், பெயர்ச் சொற்கள் கடவுளுக்கு உரியவை. உதாரணமாக, சிருஷ்டியானது, “நான் ஜீவிக்கிறேன்” என்று கூற மட்டுமே உரிமையுள்ளவையாக இருக்கிறது. ஆனால் சர்வேசுரன் மட்டுமே, “நானே ஜீவியம்” என்று கூற வல்லவராக இருக்கிறார். அப்படியானால், திவ்ய கன்னிகை இங்கே “அமல உற்பவம்” என்னும் கடவுளுக்குரிய ஒரு பெயர்ச் சொல்லைப் பயன்படுத்துவதில் மறைந்துள்ள பரம இரகசியம் என்ன? இந்தக் கேள்விக்கு அர்ச். மாக்ஸிமிலியன் கோல்பே தரும் பதிலைப் பார்ப்போம்:

“பிதா ஜெனிப்பிக்கிறார்; சுதன் அவரால் ஜெனிப்பிக்கப்படுகிறார்; இஸ்பிரீத்துசாந்துவானவர் (அவர்களுடைய நேசத்தில் இருந்து புறப்படுகிற) “உற்பவமாக” இருக்கிறார்; இது மூன்று தேவ

ஆட்களையும் பிரித்துக் காட்டுகிறது, ஆயினும் ஒரே (தேவ) சுபாவம், அதாவது, அவர்களுடைய தெய்வீக சாராம்சம், அவர்களை இணைக்கிறது. ஆகவே, **இஸ்பிரீத்துசாந்துவானவர் மகா பரிசுத்த, அளவற்ற பரிசுத்ததனமுள்ள, கறைதிரையற்ற, அமல உற்பவமாக இருக்கிறார்.** *(எனவே அமல உற்பவம் என்பது மூன்றாம் தேவ ஆளின் பெயராயிருக்கிறது.)*

புத்தியுள்ள சிருஷ்டிகள் மனப்பூர்வமாகக் கடவுளை நேசிக்கிறார்கள், இந்த நேசத்தில் அவர்கள் அதிகமதிக நெருக்கமாக அவருடன் தங்களை இணைத்துக்கொள்கிறாரகள். இனி, பாவத்தின் மிகச் சிறிய கறை கூட இல்லாதவர்களும், தேவ சித்தத்திலிருந்து ஒருபோதும் அணுவளவும் விலகாதவர்களுமாகிய அமல உற்பவியே கடவுளின் மீதான இந்த நேசத்தால் முழுமையாக நிறைந்திருக்கிற சிருஷ்டியாக இருக்கிறார்கள். அவர்கள் வாக்குக்கெட்டாத முறையில் இஸ்பிரீத்துசாந்துவின் மணவாளி என்ற முறையில் அவரோடு இணைக்கப்பட்டிருக் கிறார்கள். இந்த ஒன்றிப்பில் பரலோகமும், பூலோகமும் ஒன்றாக இணைக்கப்படுகின்றன; பரலோகத்தின் முழு நேசம் பூலோகத்தின் முழு நேசத்தோடு ஒன்றிக்கப்படுகிறது; நித்திய நேசத் தின் பூரணத்துவம் சிருஷ்டிக்கப்பட்ட அன்பின் பூரணத்துவத்தோடு ஒன்றிக்கப்படுகிறது - இதுவே நேசத்தின் சிகரமாக இருக்கிறது!

லூர்து மாநகரில் அமல உற்பவி தன்னை "பாவ மாசின்றி உற்பவித்த ஸ்திரீ" என்று அழைத்துக்கொள்ளவில்லை. (மனித) சிருஷ்டிகளிடையே மனைவி கணவனுக்குச் சொந்த மானவள் என்பதால் அவள் அவனுடைய பெயரைத் தன்னுடையதாக்கிக்கொண்டு, தன்னை அவனோடு இணைத்து, அவனுக்கு சமமானவள் ஆகிறாள், அமல உற்பவம் என்பது, முழுமை யான, சுபாவத்திற்கு மேலான ஒழுங்கிற்குப் பலனுள்ளதாக இருக்கிற நேசத்தில் அவர் யாரில் வாழ்கிறாரோ, அந்த மாசற்ற ஸ்திரீயின் திருப்பெயராக இருக்கிறது."

ஆம், தேவ திருச்சுதன் மனிதனாக அவதரிக்கும்போது, அவருடைய தேவ சுபாவம் மனித சுபாவத்தைத் தன்னோடு இணைத்துக்கொள்ளும்படியாக, தேவ சுபாவத்தை மட்டுமே கொண் டிருக்கும் இஸ்பிரீத்துவானவருடன், மனித சுபாவமுள்ள உத்தம அர்ச்சியசிஷ்ட கன்னிகை இனி ஒருபோதும் பிரிக்கப்பட முடியாதபடி இணைய வேண்டியிருந்தது. அர்ச். லூயி த மோன்ஃபோர்ட் கூறுகிறபடி, மாமரி கடவுளோடு ஒப்பிடும்போது அணுவிலும் சிறிய பொருள்தான் என்றாலும், சர்வேசுரனோடு பிரிக்க முடியாதபடி ஒன்றித்திருப்பதால், தேவ சுபாவத்திற்கு உயர்த்தப்பட்டு, தேவ மனிதனைக் கருத்தாங்கத் தன்னால் இயலும்படி, தேவ மனுஷியாக ஆக்கப்பட்டார்கள். இது நிகழ்ந்திராவிடில், தேவ, மனித சுபாவங்களைத் தம்முள் அடக்கிய தேவ மனிதன் தோன்றி யிருக்க வாய்ப்பே இருந்திருக்காது.

கடலில் விழும் வரை மழைத்துளி தன் சொந்த குணங்களைக் கொண்டிருந்தாலும், விழுந்தபின் அது கடல் நீராகவே மாறிப் போகிறது, கடல் நீரின் எல்லா குணங்களையும் அது பெற்றுக்கொள்கிறது. இது மிக அற்பமான உதாரணமாக இருந்தாலும், தேவ கன்னிகை தன்னையே "மாசற்ற உற்பவமாகக்" காண்பதற்கான காரணத்தை இது விளக்குகிறது. திவ்ய கன்னிகை தன்னுடைய திவ்ய மணவாளராகிய இஸ்பிரீத்துசாந்துவானவரின் பெயரைத் தனது சொந்தப் பெயராகப் பயன்படுத்தி, இவ்வாறு, தான் தேவ சுபாவத்திற்கு உயர்த்தப்பட்டு, தேவ-மனுஷியாக இருப்பதை வெளிப்படுத்துகிறார்கள்.

வானோர் துதிக்கும் இறைவியே, வாழி!

இராஜ பாதையாகிய திருச்சிலுவையின் பாதை

(கிறீஸ்துநாதர் அனுசாரம், பிரிவு 2, அத்தியாயம் 12)

''உன் சிலுவையைச் சுமந்துகொண்டு சேசுநாதரைப் பின்செல்'' என்ற வசனம் பலருக்குக் கடுமையாய்த் தோன்றுகிறது. ஆனால், ''சபிக்கப்பட்டவர்களே! நம்மைவிட்டு நித்திய அக்கினிக்குள் போங்கள்'' என்ற வாக்கியத்தைக் கேட்பதோ இன்னும் அதிகக் கடுமையாயிருக்கும். இப்போது சிலுவையைப் பின்செல்பவர்கள் அப்போது நித்திய நரகாக்கினைத் தீர்ப்புக்கு பயப்பட வேண்டியதில்லை. தங்கள் சீவிய காலத்தில் சிலுவையில் அறையுண்ட ஆண்டவரைப் பின்பற்றி சீவித்திருந்த சிலுவையின் ஊழியரெல்லாரும் பொதுத் தீர்வையின் நாளில் மிகுந்த நம்பிக்கையோடு நியாயாதிபதியான கிறீஸ்துநாதரை அண்டிப்போவார்கள்.

சிலுவையானது மோட்ச இராச்சியத்திற்கு வழியாயிருக்கையில் அதைச் சுமக்க நீ பயப்படுவதேன்? சிலுவையில்தான் இரட்சணியம், சிலுவையில்தான் சீவியம், சிலுவைதான் பகைவர்களிடமிருந்து உன்னைப் பாதுகாக்கும் கேடயம்; சிலுவையில் பரலோக இன்பம் பொழிகிறது, சிலுவையில் ஞான சந்தோஷம் உண்டாகிறது. சிலுவையில் உத்தமதனத்தின் பூரணமும் உத்தம பரிசுத்ததனமும் ஏற்படும். சிலுவையாலன்றி நித்திய சீவியத்தின் நம்பிக்கையில்லை. எனவே உன் சிலுவையை எடுத்துக்கொண்டு சேசுநாதரைப் பின்செல்: நித்திய சீவியத்தை அடைவாய். நீயும் உன் சிலுவையைச் சுமந்து நடக்கவும்



சிலுவையில் மரிக்கப் பிரியங்கொள்ளவும் வேண்டி அவர் ''தமது சிலுவையைச் சுமந்து முன்னே நடந்தார். ஏனெனில் ''நீ அவரோடு மரித்தால், அவரோடு உயிர்ப்பாய்; அவரது பாடுகளுக்குப் பங்காளியாயிருந்தால், அவர் மகிமைக்கும் பங்காளியாயிருப்பாய்.

ஆகவே சிலுவையில் மரிப்பதில் எல்லாம் அடங்கியிருக்கிறது; சிலுவையின் வழியைத் தவிர, நித்திய சீவியத்தையும் மெய்யான உள்ளரங்க சமாதானத்தையும் அடைவதற்கு வேறு வழியில்லை. எங்கே போனாலும், எதைத் தேடினாலும், சிலுவையின் வழியைத் தவிர மேலே அதிகமாய் உயர்ந்த வழியையோ, கீழே அதிக நிச்சயமான வழியையோ நீ காணப்போவதில்லை. உன் இஷ்டப்படி சகலத்தையும் நீ ஒழுங்குபடுத்தி நடத்திவந்தாலும் மனது பொருந்தியோ மனதில்லாமலோ பாடுபட வேண்டுமென்றுதான் காண்பாய். ஒன்றில் உன் சரீரத்தில் ஏதாவதொரு பிணியால் வேதனைப்படுவாய், அல்லது உன் ஆத்துமத்தில் ஏதாவது கலக்கமுற்றிருப்பாய்.

ஒருசமயம் நீ சர்வேசுரனால் கைவிடப்பட்டதாகத் தோன்றும், மற்றொரு சமயம் அயலானால் கஷ்டப்படுவாய்; இவற்றைவிட அதிக கஷ்டமானது ஏதென்றால் அநேகமுறை உனக்கே நீ பாரமாயிருப்பாய். அப்படியாயினும் யாதோர் மருந்தினால் சுகமடையவும் அல்லது ஆறுதலடையவும் உன்னால் முடியாமலிருக்கும்; ஆனுல் சர்வேசுரனுக்குச் சித்தம் வரும் வரை நீ அவைகளை அனுபவிக்கத்தான் வேண்டும். ஏனெனில் சர்வேசுரனுக்கு நீ உன்னை முற்றிலும் கீழ்ப்படுத்தும்படியாகவும், துன்பத்தினால் நீ அதிகத் தாழ்ச்சியுள்ளவனாகும்படியாகவும், ஆறுதலின்றி துன்பத்தை நீ சகிக்கக் கற்றுக்கொள்வது தேவ சித்தம். சேசுவின் திருப்பாடுகளை அதிக மன உருக்கத்தோடு உணருகிறவன் எவன் என்றால் அதே வகையான சில துன்பங்களை அனுபவித்திருக்கிறவன்தான்.

ஆனதால் சிலுவை எப்போதும் உனக்குத் தயாராயிருக்கிறது, எங்கும் உனக்காகக் காத்திருக்கிறது. நீ எங்கே போனாலும் அதற்குத் தப்பித்துக்கொள்ள முடியாது, எங்கும் எல்லாவற்றிலும் சிலுவை யைத்தான் காண்பாய். எச்சமயத்திலும் நீ பொறுமையோடிரு, இல்லாவிட்டால் உள்ளரங்கச் சமாதானத்தை அனுபவிக்கவும் மாட்டாய், நித்திய முடிக்குப் பாத்திரவானாகவும் மாட்டாய்.

நீ மனது பொருந்தி சிலுவையைச் சுமந்து நடந்தால், அது உன்னை நித்தியப் பேரின்பத்திற்குச் சுமந்து செல்லும். அவ்விடத்தில் எல்லாத் துன்பங்களுக்கும் முடிவு இருக்கிறது; இவ்வுலகத்தில் அப்படியாகாது. ஆனுல் நீ அதைக் கட்டாயத்தின்பேரில் சுமந்தால் உனக்கு அது அதிக பளுவா யிருக்கும், உன்னையே நீ படாத கஷ்டத்திற்கு உள்ளாக்குகிறாய்; ஆயினும் அதைச் சுமந்துதான் தீர வேண்டியதாகும். ஒரு சிலுவையை நீ தள்ளிப்போட்டால் சீக்கிரத்தில் வேறொன்றை அடைவாய்; சில வேளை இது அதிக பளுவானதாயிருக்கும்.

எவனும் தப்பக்கூடாத காரியத்திற்கு நீ தப்பித்துக்கொள்ளலாமென்று எண்ணுகிறாயா? சிலுவையின்றியும் துன்பமின்றியும் இருந்த அர்ச்சியசிஷ்டவர்கள் யார்? நமது ஆண்டவரும் கூட ஒரு மணி நேரமாகிலும் திருப்பாடுகளின் துன்பமின்றி இருந்ததில்லை; நீயோ புனித சிலுவையின் பாதையாகிற இந்த இராஜ பாதையைவிட வேறு பாதையை எவ்விதம் தேடுவாய்?

கிறீஸ்துநாதரின் சீவியம் சிலுவையும் வேதனையுமாயிருந்தது; நீயோ இளைப்பாற்றி தேடுகிறாய்! துன்பங்களைச் சகிப்பதைவிட வேறு எதையாவது தேடினால் மோசம் போவாய்; ஏனெனில், இந்த சீவியம் துன்பங்கள் நிறைந்து சிலுவைகளால் சூழப்பட்டுள்ளது. ஒருவன் ஞானத்தில் எவ்வளவு வளர்வானோ, அவ்வளவு அதிக பாரச் சிலுவைகளை மேன்மேலும் சுமந்துகொள்வான்; ஏனெனில், அவனது தேவசிநேக மிகுதியால், அவனது பரதேச வாழ்வின் ஏக்கம் அதிகமாய் வளருகிறது.

ஆயினும் இப்படிப் பல விதத்திலும் கஸ்தி அடைபவன் ஆறுதல் பெறுவான்; ஏனெனில் தன் சிலுவையைப் பொறுமையோடு சகித்து வருவதால் தனக்கு வரும் பலன் அதிகரிப்பதை உணர் கிறான். ஏனெனில் அவன் மனமுவந்து துன்பத்திற்குத் தன்னைக் கையளிக்கும்போது, துன்பத்தின் பாரம் தேவ ஆறுதலின் நம்பிக்கையாக மாறிப்போகிறது. சரீரம் துன்பத்தால் நொறுக்கப்படும் போது, ஆத்துமம் உள்ளரங்க வரப்பிரசாதத்தால் தேற்றப்படுகிறது. சிலுவையைச் சுமப்பதும், அதை நேசிப்பதும், சரீரத்தைத் தண்டித்து அடக்குவதும், பெருமைகளைத் தள்ளுவதும், அவமானங் களை விரும்பி ஏற்றுக்கொள்வதும், தன்னையே நிந்திப்பதும், நிந்திக்கப்பட ஆசிப்பதும், எவ்வித செல்வத்தையும் தேடாதிருப்பதும், மனித இயல்பல்ல. உனது சொந்த பலத்தை மட்டும் கொண்டு இதெல்லாம் செய்ய முடியாது. ஆனால் ஆண்டவரை நம்பினால், பரலோகத்தினின்று உனக்குப் பலம் கொடுக்கப்படும். அப்போது உலகமும் சரீரமும் உன் ஆளுகைக்கு உட்படுத்தப்படும். பசாசுக்கும் நீ பயப்பட வேண்டியதில்லை.

ஆனதால் ஆண்டவரின் சிலுவையைத் தைரியமாய்ச் சுமந்துபோகும்படி, அவரது பிரமாணிக் கமுள்ள உத்தம தாசனைப் போல் உன்னை ஆயத்தப்படுத்து. ஆண்டவரின் சிநேகிதனாயிருக்கவும் அவர் மகிமையில் பங்கடையவும் நீ விரும்பினால் அவரது பாத்திரத்தில் மிகுந்த பிரியத்தோடு பானம்பண்ணு. எவ்வித துன்பங்களையும் சகிக்கத் தயாராயிரு. அவற்றைப் பெருத்த ஆறுதல்கள் என்று எண்ணிக்கொள்; ஏனெனில், ‘‘இக்காலத் துன்பங்களையெல்லாம் நீ ஒருவனே அனுபவிக்க முடிந்தாலும், அவைகளால் நீ பெறப் போகும் மகா உன்னத மகிமைக்கு அவை ஈடாகாது.’’

திருச்சிலுவை உயர்த்தப்பட்ட திருநாள்: செப்டம்பர் **14.**

அர்ச். சூசையப்பரின் பரிசுத்ததனத்தை விசுவாசிகள் கண்டுகொள்ளும்போது வெற்றியின் முழக்கம் கேட்கப்படும்.

– அர்ச். இஸோலானிஸ் இசிதோர்.

அர்ச். சூசையப்பரின் பிறப்பும், விருத்தசேதனமும்

சூசையப்பர் பிறக்க வேண்டிய அற்புதமான நாளும் வந்தது. அவரது தாய் பிரசவ வேதனையின்றி அவரை ஈன்றெடுத்தாள். அவளது மிகச் சிறிய மகவு தேவதூதர்களுக்குரியதும், வணக்கத்துக்குரியதும், பேரமைதியுள்ளதுமான முக பாவனையைக் கொண்டிருந்தது. பச்சிளங்குழந்தைகளின் தெளிவற்ற முகக்கூறுகளைப் போலன்றி குழந்தை சூசையிடம் இவை மிகத் தெளிவாயிருந்தன. அவரைப் பார்ப்பதே பிறர் மனங்களில் பக்திப் பற்றுதலைத் தூண்டுவதாக இருந்தது.

அவருடைய தாய் தன் சின்ன மகவைக் கரங்களில் ஏந்தி, இந்த மகிழ்ச்சியான பேறுகாலத்திற்காகக் கடவுளுக்கு நன்றி செலுத்தினாள். குருத்துவ ஊழியத்திற்கு அவரை அர்ப்பணிக்கும் கருத்தோடு அவரைக் கடவுளுக்கு ஒப்புக்கொடுத்தாள். ஆனால், தேவமாதாவாகிய பரிசுத்த ஆவியானவரின் உயிருள்ள தேவாலயத்திற்கு அவர் பாதுகாவலராக இருக்க வேண்டும் என்று கடவுள் ஏற்கெனவே நியமம் செய்திருந்தார்.



சர்வேசுரன் இந்தத் தாயின் விருப்பத்தையும் காணிக்கையையும் ஏற்றுக்கொண்டார். என்றாலும், அதைவிட உயர்வான ஓர் அலுவலுக்கு சூசையப்பரை நியமிக்கத் தாம் தயை கூர்ந்த காரணத்தாலேயே அப்படிச் செய்தார். இந்தக் குழந்தையின் பிறப்பு தொடர்பான அதிசய நிகழ்வுகள் பற்றிய செய்தி நாசரேத் முழுவதும் பரவியது. சூசையப்பரின் பிறப்பின்போது தோன்றிய மூன்று நட்சத்திரங்களும் மீண்டும் அந்த இல்லத்திற்கு மேல் தோன்றின. அனைவரும் அவற்றைக் கண்டு அதிசயித்தனர். ஆயினும், அவை விரைவில் மறைந்து விட்டன. குழந்தை சூசை தமது சின்னக் கண்களைத் திறந்தவுடன், அவற்றைப் பரலோகத்தை நோக்கித் திருப்பினார். சற்று நேரம் அவரது கண்கள் இந்த நட்சத்திரங்களின்மீது பதிந்திருந்தன. தமது பிறப்பு பற்றிக் கடவுள் உலகிற்குத் தந்த இந்த அற்புத அடையாளத்தைப் பற்றி அவர் ஆச்சரிய உணர்வை வெளிப்படுத்தினார்.

திருக்குழந்தை சூசை தம் அழைப்புக்குத் தகுந்தபடி அமைதியாக இருந்தார். இது அவரது பெற்றோருக்கும், குறிப்பாக, அவரை மகிழ்ச்சியோடும், அக்கறையோடும் உணவளித்து வளர்த்து வந்த அவருடைய தாய்க்கும் ஓர் ஆசீர்வாதமாக இருந்தது. எல்லாக் குழந்தைகளுக்கும் நடப்பது போல, யாராவது தம்மைக் கொஞ்சுவதை அவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. தமது மாசற்றதனத்தின் ஒளியை அவர் எவ்வளவு அக்கறையோடு மங்காமல் பாதுகாத்துக்கொள்வார் என்பதை அந்தப் பிஞ்சு வயதிலேயே செயலில் காட்டினார். அவரது பெற்றோர் மட்டும்தான் அவரைக் கொஞ்சி மகிழ, அவரால் அனுமதிக்கப்பட்டார்கள். ஆனாலும், இதில் அவர்களும்கூட தங்களைக் கட்டுப்படுத்திக்கொண்டார்கள், ஏனெனில் இந்தப் பிஞ்சுக் குழந்தை பிறர் தன்னைக் கொஞ்சுவதைத் தவிர்க்க எவ்வளவு விரும்புகிறது என்பதை அவர்கள் கண்டுபிடித்தார்கள்.

சூசை பிறந்த எட்டாம் நாள், அவருடைய பெற்றோர் திருச்சட்டத்திற்கு உட்பட்டும், யூதர்களின் வழக்கப்படியும் அவருக்கு விருத்தசேதனம் செய்வித்தார்கள். அவருக்கு "சூசை" என்னும் பெயர் சூட்டப்பட்டது. இந்தச் சடங்கு நிறைவேற்றப்பட்டபோது, அது தந்த வலியால் குழந்தை சற்று அழுதார், ஆனால் விரைவில் அவர் அமைதியாகி விட்டார். ஏனெனில் இப்போது கடவுள் அவர் மீது பொழிந்த அநேக கொடைகளில், தமது புத்தி விபரத்தைப் பயன்படுத்தும் வல்லமையும் ஒன்றாக இருந்தது. அவரைக் கடவுளின் வெறுப்புக்குரியவராக ஆக்கக்கூடிய ஜென்மப் பாவக் கறையிலிருந்து அவர் முன்கூட்டியே விடுவிக்கப்பட்டிருந்ததால், கடவுளின் வரப்பிரசாதத்தையும் உறவையும் அவர் ஏற்கெனவே பெற்றிருந்தார். சூசை கடவுளை அதிமிக வணக்கத்தோடு ஆராதித்தார். தமது சிறு சிரசைத் தாழ்த்தி அவரை ஆராதித்தார்; தமக்குக் கடவுளால் தரப்பட்ட ஆசீர்வாதங்களை உணர்ந்து, மன உருக்கத்தோடு நன்றி செலுத்தினார், தம்மை ஆண்டவருக்கு முழுமையாக அர்ப்பணித்தார். அவரது வழக்கமான "காவல் தூதரைத்" தவிர, கடவுள் மேலும் ஒரு தூதரை நியமித்திருந்தார். இவர் அடிக்கடி அவரது கனவுகளில் தோன்றி அவரோடு பேசினார்.

இவ்வாறு, அந்த மிக இளவயதிலேயே சூசையப்பர் புத்தி விபரம் அறிந்திருந்தார். கடவுளைப் பற்றிய அறிவையும், அவருக்குத் தாம் செலுத்தும் துதி புகழ்ச்சியையும் அதிகரித்துக்கொள்ள இந்தக் கொடையை அவர் பயன்படுத்தினார். தமது தற்போதைய நிலையின் தர்மசங்கடமான, தமக்கு ஒவ்வாத அம்சங்களை மிகுந்த பொறுமையோடு அவர் தாங்கிக்கொண்டார். இவ்வாறு அவர் அந்த மிக இள வயதிலேயே, அவர் தாம் அனுபவிக்கும் துன்பங்களைக் கடவுளுக்கு ஒப்புக்கொடுக்கும்படி தூதர் அவருக்கு அடிக்கடி அறிவுறுத்தி வந்தார். அவரும் கடவுள் தமக்குக் காண்பித்துள்ள இரக்கத்துக்கு நன்றியறிதலாக இந்த ஒப்புக்கொடுத்தலை அடிக்கடி செய்துவர, கடவுள் சூசையப்பரின் இந்த ஒப்புக்கொடுத்தல்களால் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார்.

அடுத்து, கடவுள் தம் படைப்புகளால் எவ்வளவு மோசமான விதத்தில் நோகடிக்கப்படுகிறார் என்பதை சூசை பாலன் உணரத் தொடங்கினார். இதன் காரணமாக, தம் பெற்றோருக்குத் தொல்லை தராதபடி, அவர் பிறர் கவனிக்காதபடி மவுனமாக அழுவார். தமது மாசற்ற கண்ணீர்த் துளிகளை ஒப்புக்கொடுப்பதன் மூலம் இன்னும் பெரிதான வரங்களையும், ஞான ஒளிகளையும் கடவுளிடமிருந்து அவர் பெற்றுக்கொண்டார். இவற்றிற்குப் பிரதிநன்றியாக, அவர் தம்மிடம் இவ்வளவு தாராளமுள்ளவராக இருந்த கடவுளுக்கு மீண்டும் மீண்டும் நன்றி செலுத்தி வந்தார்.

தம் தாய் தமது அணையாடைகளை மாற்ற வரும்போதெல்லாம் சூசையப்பர் கண்களை மூடிக்கொள்வார், முகம் வெட்கத்தால் சிவக்கும். இவற்றையெல்லாம் கவனித்த அன்னை, இது போன்ற துன்பத்தை அவருக்கு அதிகம் தராதபடி, அவருக்கு மிக விரைவாக உடை மாற்றினாள். அவளும் கூட மிகுந்த ஞான வெளிச்சம் பெற்ற, புண்ணியம் மிகுந்த ஆத்துமமாக இருந்தாள். சூசை குறிப்பாக தம் தாயிடம் தனிப் பாசம் கொண்டிருந்தார். அவர் மிகச் சிறப்பான முறையில் சரீர ரீதியாகவும், ஆன்ம ரீதியாகவும் முதிர்ச்சி பெற்றுவந்தார்; நல்ல ஆரோக்கியம் உள்ளவளாக இருந்த தமது தாயால் உணவூட்டப்பட்டு அவர் உடலளவில் மிக நல்ல வளர்ச்சி பெற்றுவந்தார்; அவரது ஆன்மாவின் வளர்ச்சியோ, தெய்வீகக் கருவூலத்தினின்றும், தாராளத்தினின்றும் அவர் பெற்றுக்கொண்ட தேவ வரங்களிலிருந்து பெறப்பட்ட வளர்ச்சியாக இருந்தது. இறுதியாக, தேவ வார்த்தையானவரின் திருத்தாயாரின் தகுதியுள்ள மணவாளராக அவரை ஆக்கும்படி, கடவுள் தமது விருப்பப்படி அவரை உருவாக்கி வந்தார். இந்தக் குழந்தை கடவுளிடமிருந்து இந்தக் கொடைகளை நன்றியுணர்வோடு பெற்றுக்கொண்டார். *(தொடரும்)*

கன்னிகையான மரிய செசீலியா பெய்ஜுக்கு வெளிப்படுத்தப்பட்ட
அர்ச். சூசையப்பரின் வாழ்க்கை வரலாறு என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது.)

அர்ச். மிக்கேல் சம்மனசானவருக்கு நம்மை அர்ப்பணித்தல்

அர்ச். மிக்கேல் சம்மனசானவருக்கு நம்மை அர்ப்பணிக்கும் வழக்கம் மிக நீண்ட காலமாக இருந்து வருகிறது. சங். ஜெரால்ட் வான் சுவாமி தமது "பேயும் அதை எதிர்க்கும் முறைகளும்" (Devil and how to resist him) என்னும் நூலில், மத்திய காலங்களில் அர்ச். மிக்கேல் அதிதூதருக்கு மக்கள் எவ்வளவு சிறப்பான பக்தி வணக்கம் செலுத்தி வந்தார்கள் என்றும், தற்போது அவர் எவ்வளவு அதிகமாக மறைக்கப்பட்டு வருகிறார் என்றும் தெளிவாக விளக்குகிறார். இப்போது போலவே மத்திய காலங்களில் செப்டம்பர் 29ஆம் தேதி கொண்டாடப்பட்டு வந்த இந்த அதிதூதரின் திருநாள் ஒரு கடன் திருநாளாக அனுசரிக்கப்பட்டு வந்தது.

19-ஆம் நூற்றாண்டின் இறுதிவாக்கில், பரிசுத்த பாப்பரசர் 13ஆம் சிங்கராயர் அர்ச். மிக்கேல் அதிதூதரின் மீதான பக்தி முயற்சிகளை மீண்டும் கொண்டு வர வெகுவாக முயன்றார். திவ்ய பலி பூசையின் முடிவில் அதிதூத ருக்கான ஜெபத்தைச் சொல்லுமாறு அவர் கட்டளையிட்டார். இந்த ஜெபத்தை அவரே எழுதித் தந்தார். இந்தக் கட்டளை பரிசுத்த பாப்பரசர் ஒரு நாள் கண்ட ஒரு காட்சியின் விளைவே என்று அவருடைய செயலரான மொன். ரினால்டோ ஆஞ்சலி என்பவர் தெரிவிக்கிறார். பாப்பரசர் 13-ஆம் சிங்கராயரின் இந்தக் கட்டளையைப் ஆறாம் சின்னப்பர் அறிமுகப்படுத்திய புதிய முறைத் திருப்பலி அலட்சியப்படுத்தி விட்டது. இன்று திருச்சபையில் நடக்கும் அலங்கோலங்களுக்கும், சமுதாயத்தில் நிலவும் அமைதியின்மைக்கும் புதிய முறைத் திருப்பலியில் அர்ச். மிக்கேல் சம்மனசானவரின் ஜெபத்தை நீக்கியது கூட காரணமாக இருக்கலாம். நல்ல வேளையாக, பாரம்பரிய திரிதெந்தீன் திவ்ய பலிபூசையில் இந்த ஜெபம் இன்றும் ஜெபிக்கப்படுகிறது என்பது ஓர் ஆறுதலளிக்கும் அம்சமே.



புதிய முறைத் திருப்பலியில் இந்த ஜெபம் சொல்லப்படாதது மட்டுமல்ல, பாரம்பரிய திவ்ய பலிபூசையில் பீடத்தடியில் குருவானவர் சொல்லும் பாவசங்கீர்த்தன மந்திரத்தில் இரு முறையும், விசுவாசிகள் சொல்லும் பாவசங்கீர்த்தன மந்திரத்தில் இரு முறையும், பின்பு நன்மை வாங்குமுன் சொல்லப்படும் பாவசங்கீர்த்தன மந்திரத்தில் இரு முறையும் பூசை முடிவில் சொல்லப்படும் ஜெபத்தில் ஒரு முறையுமாக மொத்தம் ஏழு முறை உச்சரிக்கப்படுகிற அர்ச். மிக்கேல் அதிதூதரின் திருப்பெயர், புதிய முறைத் திருப்பலியில் ஒரு முறை கூட சொல்லப்படுவதேயில்லை. பாரம்பரியமாக, அர்ச். மிக்கேல் சம்மனசானவர் காட்சியளித்த திருநாள் மே 8-ஆம் நாள் கொண்டாடப்பட்டு வந்தது. ஆனால் 1960-ஆம் ஆண்டில் இந்தத் திருநாள் முழுமையாக நீக்கப்பட்டு விட்டது. ஆனால் பாரம்பரிய திவ்ய பலிபூசை நிறைவேற்றும் குருக்கள் பின்பற்றும் நாள்காட்டியில் இந்தத் திருநாள் இன்றும் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

திருவழிபாட்டிலிருந்து அர்ச். மிக்கேல் அதிதூதரின் திருப்பெயரை நீக்கியது எவ்வளவு தவறானது, பயங்கரத்துக்குரியது என்பதை, 1960-லிருந்து திருச்சபைக்கு நேரிட்டு வரும் துயரங்

களையும், சமுதாயத்தின் சீர்கேடுகளையும் பார்த்தாலே புரிந்துகொள்ளலாம். ஒழுக்கக் கேடுகள், கருச்சிதைவு, கருத்தடை சாதனங்கள், அசுத்தக் காட்சிகள், திருமண முறிவுகள், ஒரு பாலினத் திருமணங்கள், ஆட்கடத்தல், இன்னும் ஏராளமான கொடுமைகள், கடந்த 60 ஆண்டுகளில் சமுதாயத்திலும், குடும்ப வாழ்விலும், துறவற வாழ்விலும் ஏராளமான வீழ்ச்சிகள், குருக்களிடையே ஏராளமாக நிலவும் அதிருப்தி ஆகியவற்றிற்கு, நவீனத் திருச்சபையால் அர்ச். மிக்கேல் அதிதூத ரின் பக்தி கைவிடப்பட்டது ஒரு முக்கியமான காரணம் என்று நாம் உறுதியாகக் கூறலாம். கடந்த 60 ஆண்டுகளில் ஏராளமான குருக்களும், துறவிகளும் தங்கள் மேலான தேவ அழைத்தலைக் கைவிட்டுவிட்டதை யார் மறுக்க முடியும்? 1965 முதல் 2005 வரையிலான காலகட்டத்தில் ஏறத்தாழ 1,50,000 துறவறத்தார் தங்கள் அழைத்தலைக் கைவிட்டு வெளியேறிவிட்டார்கள் என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கடினமான காலத்தில், அர்ச். மிக்கேல் சம்மனசானரிடம் நம்மை அர்ப்பணிப்பது மிகப் பெரிய தற்காப்பு முயற்சியாக இருக்கிறது. நம்மை அர்ப்பணிப்பதென்றால், நம்மை அவரது பணிக்கு ஒப்படைப்பது என்பது பொருள். பதிலுக்கு அவர் நம்மைப் பாதுகாப்பார் என்பது உறுதி. அவருக்கு நம்மை அர்ப்பணிப்பதென்பது தேவ தாயாருக்கு அல்லது அர்ச் சூசையப்பருக்கு நம்மை அர்ப்பணிப்பதற்கு இடையூறாகாது. தேவதாயாருடைய மனமும், அர்ச். சூசையப்பரின் மனமும் எப்போதும் தேவ சித்தத்திற்கு ஒத்தவையாகவே இருக்கின்றன. நம்மை அவர்களுக்கு அர்ப்பணிப்பது நமதாண்டவருக்கு நம்மை அர்ப்பணிப்பதாகும். தேவ தாயார் நம் தாய்; அர்ச். சூசையப்பர் நமது தகப்பன்; அர்ச். மிக்கேல் சம்மனசானவர் நமது இளவரசர், நமது பாதுகாவலர், நமது சகோதரர்.

1928-ஆம் ஆண்டு, அமெரிக்காவின் அயோவா (Iowa) நகரத்தில் நடந்த ஒரு பேயோட்டும் சடங்கு, பாப்பரசர் 13-ஆம் சிங்கராயரால் எழுதப்பட்டதும், பூசைக்குப் பின் சொல்லப் படுவதுமான அர்ச். மிக்கேல் சம்மனசானவர் ஜெபத்திற்கு சாத்தான் எவ்வளவு பயப்படுகிறான் என்பதைத் தெளிவாகக் காட்டிவிட்டது. எனவே நாமும், "அதிதூதரான அர்ச்சியசிஷ்ட மிக்கேலே, எங்கள் போராட்டத்தில் எங்களைத் தற்காத்தருளும். பசாசின் துர்க்கருத்தையும் அதன் சற்பனை களையும் அகற்றி எங்களுக்குத் துணையாயிரும். தாழ்மையான எங்கள் மன்றாட்டைக் கேட்டு சர்வேசுரன் பசாசுக்குக் கற்பிப்பாராக. நீரும் மோட்ச சேனைக்குத் தலைமையானவரே, ஆத்துமங் களை அழிக்கிறதற்கு உலகத்தில் சுற்றித் திரியும் பேயையும் மற்ற துஷ்ட அரூபிகளையும் தேவ வல்லமையின் பலத்தால் நரகத்தில் தள்ளுவீராக. - ஆமென்" என்ற ஜெபத்தை ஒரு நாளில் பல முறை சொல்லி, அர்ச். மிக்கேல் அதிதூதரின் பாதுகாவலைப் பெற்றுக்கொள்வோமாக.


திருநாள்: செப்டம்பர் 29. மரியாயே வாழ்க!

கிறீஸ்துவை அறியும் அறிவையன்றி மற்றதெல்லாம் குப்பையே!

அர்ச். கோலெட்டின் கண்கள் எப்போதும் இனிய தாழ்ச்சியால் நிரம்பி, தாழ்ந்திருக்கும், இனிய அடக்க வொடுக்கத்தோடு தியானத்தில் கிரகிக்கப்பட்டிருக்கும். ஏனெனில், அவளே இதுபற்றி: "திவ்ய பலி பூசையில், தேவ அப்ப எழுந்தேற்றத்தின்போது, நான் சேசுநாதரின்மீது என் கண்களைப் பதித்து, அவருடைய காட்சியால் அவைகளை நிரப்பிக்கொள்வேன். வேறு எந்த ஒரு காட்சியும் என் கண்களில் இருந்து அவரை விலக்கி விடாதபடி, என் கண்களை நான் அதிகமாகத் திறப்பதில்லை!" என்றாள். புனிதர்களின் மாதிரிகைகளைக் கண்டுபாவிப்பது எளிதல்ல, ஆனால் அதுவே இனிமையானது; கடவுளுக்கு மிகவும் பிரியமானது!

அன்பின் அரசராகிய சேசுக்கிறீஸ்துநாதர்

இதோ, கல்வாரிக் குன்றின் உச்சியில் நிற்கிறோம். அடிக்கடி நம் மனக்கண்களால் நாம் கண்டு தியானித்த காட்சிதான்: சேசுநாதர் இரு கள்வர்களிடையே சிலுவையில் தொங்கி, மரித்துக் கொண்டிருக்கிறார். அவருடைய திருச்சரீரமெங்கும் இரத்த ஊற்றுக்கள் தோன்றிப் பெருக்கெடுத்து, மரணம் அவரை நெருங்கும் இச்சமயத்தில் வற்றிக் காய்ந்து போகத் தொடங்கியுள்ளன. வாழ்நாள் முழுவதும் திருடனாயிருந்து, தம் ஆண்டவருடன் பாக்கியமான மரணமடைந்து, நித்திய ஜீவியத் தையே திருடிக்கொண்டவரான தீஸ்மாஸ் அவரிடம் என்ன காண்கிறார்? மனித உருவை இழந்து, உலகிலேயே அனைவரிலும் பெரிய பாவியைப் போல, அவமானச் சிலுவை மரணத்திற்குக் கையளிக்கப்பட்டு, தோல்வியடைந்தவர் போல மரணத்தை நெருங்கிக்கொண்டிருக்கும் அவரிடம் தீஸ்மாஸ் காண்பதென்ன? அது அவருடைய வார்த்தைகளில் வெளிப்படுகிறது: **“சுவாமி, தேவரீர் உம்முடைய இராச்சியத்தில் சேரும்போது அடியேனை நினைத்தருளும்!”** தலைசாய்க்கவும் இடமின்றி, உலக தரித்திரத்தின் உச்சத்திலிருந்த அவரில் தீஸ்மாஸ் பரலோக பூலோக அரசரைக் கண்டார். ஆடைகள் கூட இன்றி, கைவிடப்பட்டவராகக் காணப்பட்டவரிடம் அவர் சர்வேசுரனையே கண்டார்.



கிறீஸ்து அரசரின் இராச்சியம் ஆத்துமத்தில் ஞானஸ்நானத்துடன் தொடங்குகிறது. அதில் ஜென்மப் பாவமும், ஒரு வேளை கர்மப் பாவங்கள் ஆத்துமத்தில் இருந்தால் அவையும் கிறீஸ்து அரசரின் திரு இரத்தத்தால் கழுவப்பட்டு, ஆத்துமம் அவரது இராச்சியத்தின் பிரஜையாகிறது. இந்த இராச்சியத்தின் பிரஜையாய் நிலைத்திருக்கத் தேவையான தேவ வரப்பிரசாதங்கள், விசேஷமாக, விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேகம் என்னும் மூன்று தேவ சம்பந்தமான புண்ணியங்கள் ஆகியவற்றின் விதை ஆத்துமத்தில் ஊன்றப்படுகிறது. ஆத்துமம் தனது பரிசுத்த வாழ்வாலும், புண்ணியங்களாலும், உத்தமதனம் அடையப் போராடுவதாலும், தன்னில் ஊன்றப்பட்ட இந்த விதை செழித்து வளரும்படி செய்ய வேண்டும். அப்போது, தனது கால முடிவில், அது இந்தப் பேரசரின் பரலோக இராச்சியத்தில் அவரோடு அரசாளத் தகுதி பெறும்.

இந்தப் பேரரசர் தமது அரச அதிகாரத்தைச் செயல்படுத்தும் விதம் உலகத்திற்கு விசித்திர மானதே: பாவிகளை மன்னித்து, அவர்களை இரட்சிப்பதில்தான் அவர் தம் இராஜரீகத்தை வெளிப்படுத்துகிறார். ஆன்மாக்களை இரட்சிப்பதற்காக மட்டுமே அவர் அரசராயிருக்கிறார். வெற்றிகொள்ள உலக அரசர்கள் பயன்படுத்தும் படைபலமோ, வன்முறையோ அவரிடம் இல்லை. அவர் சமாதானத்தின் அரசராயிருக்கிறார்; அவர்களைப் போல் அவர் செல்வந்தராக இல்லை. அவர் தரித்திரத்தின் அரசராயிருக்கிறார்; பாவியை மன்னிப்பதை அவர் தள்ளிப் போடுவதில்லை. அந்த ஊதாரி மகனைக் கண்டதும், எப்படி அவனை நோக்கி ஓடி, அவனைத் தாவி அணைத்து முத்தமழை பொழிகிறார் என்று பாருங்கள்! அவனுடைய பாவசங்கீர்த்தனத்தை முழுமையாகக் கேட்கும் பொறுமை கூட அவரிடம் இல்லையே! ஆம், அவர் எல்லையற்ற தெய்வீக அன்பின் அரசராயிருக்கிறார்.

அளவற்ற தேவசிநேகத்தின் இந்தப் பேரரசர் தம்முடைய பிரஜைகளிடம் தேடுவதென்ன? அவர் தம்மைத்தாமே அவர்களிடம் தேடுகிறார்; தம்முடைய தெய்வீகச் சாயலை, தம்முடைய **மாசற்றதனத்தை** *அவர்களிடம் தேடுகிறார். மனிதர்களில் அவர் மற்ற எதையும் விட அதிகமாக விரும்பித் தேடுவது இந்த மாசற்றதனத்தையே. அதனால்தான் அவருடைய பரிசுத்த மாதாவாகிய திவ்ய கன்னிகையும், அவர்களுடைய சுவீகார மகனான அர்ச். அருளப்பரும் இந்தப் பேரரசருக்கு மற்ற யாரையும் விட அதிகப் பிரியத்திற்குரியவர்களாக இருக்கிறார்கள். இந்த மாசற்றதனத்தையும், பரிசுத்த கன்னிமையையும், கற்பையும் விட அவரால் அதிகம் நேசிக்கப்படுவது ஏதுமில்லை.*

இந்த ஆத்தும, சரீர மாசற்றதனத்தைத் தங்கள் பாவத்தால் இழந்துவிட்டவர்களிடம் அவர் தேடுகிற மற்றொரு காரியமுண்டு. **அதுவே உத்தம மனஸ்தாபம்!** *அதுவே மரிய மதலேனம்மாளையும், மத்தேயுவையும், சக்கேயுவையும், எகிப்து மரியம்மாளையும் அவருடைய அன்பிற்குத் தகுதியுள்ளவர்களாக்கியது. ஏழு முறை மட்டுமல்ல, ஏழு முறை எழுபது முறை நம் பாவங்களை மன்னிக்க, தமது தேவசிநேகத்தின் அபரிமிதத்தால் அவர் ஆயத்தமாயிருக்கிறார் என்பது உண்மைதான். ஆனால் அதற்காகத் திரும்பத் திரும்ப ஒரே பாவத்தில் விழுவது அவருடைய ஒரு நல்ல மகனுக்கு அழகல்ல. பாவத்தில் விழாதபடி ஜெபத்தையும், தவத்தையும் கொண்டு அவன் போராடுவதைக் காண்பது அவருக்கு இன்பமாக இருக்கிறது. இவற்றை மீறி அவன் பாவத்தில் மீண்டும் தவறி விழுந்தாலும், உத்தம மனஸ்தாபத்தோடு கூடிய பாவசங்கீர்த்தனத்தைக் கொண்டு, தன்னைத் தூக்கிவிட நீட்டப்படும் தேவ கரத்தைப் பற்றிக்கொள்வது அவனுக்குப் போதுமானது.*

அடுத்து, மாசற்றதனத்தை அல்லது உத்தம மனஸ்தாபத்தை மட்டுமல்ல, மாறாக, **தமது துன்பச் சாயலை, தமது திருப்பாடுகளின் சாயலை** *நம்மிடம் காணவும் அவர் ஏக்கம் கொள்கிறார்: "யாதொருவன் என் பிறகே வர மனதாயிருந்தால், தன்னைத்தானே பரித்தியாகஞ் செய்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்செல்லக்கடவான்" என்று அவர் அழைக்கிறார் (மத். 16:24); "நீங்கள் புலம்பி அழுவீர்கள்; உலகமோ சந்தோஷப்படும்" என்கிறார் (அரு. 16:20). ஆனால், என் சகோதரரே, ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடம் வந்து, கிறீஸ்து நாதரை விசுவசித்தால், அவர் உலக செல்வங்களை உங்களுக்குத் தந்தருளுவார் என்று போதிக்கும் ஓநாய்களாகிய கள்ளத் தீர்க்கதரிசிகளைக் குறித்து விழிப்பாயிருங்கள். உலக செல்வம் அவருக்கு எதிரானது. அவருக்கும், உலக செல்வத்திற்கும் நீங்கள் ஒரே நேரத்தில் ஊழியம் செய்ய முடியாது. தம் போதனைகளைக் கேட்டுக்கொண்டிருந்த மக்கள் கூட்டத்திற்கு மூன்றாவது நாள் தான் அவர் அப்பத்தையும் மீனையும் உணவாகத் தந்தார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அமலோற்பவக் கன்னிகை அர்ச். பெர்னதெத்தம்மாளை நோக்கி: "இவ்வுலகில் உனக்கு நான் எந்த இன்பத்தையும் வாக்களிக்க மாட்டேன்" என்று கூறியதைச் சிந்தியுங்கள். பரலோகத்தை நோக்கிய இந்தப் பரதேசப் பாதையில் நம்மை ஊக்குவிக்கும்படி சில சமயங்களில் நம் தாழ்ச்சியின் அரசர் பாலைவனச் சோலைகளை நமக்குக் காட்டக்கூடும். ஆனால் நாம் நிரந்தரமாகத் தங்குவதற்கல்ல, மாறாக, சற்று இளைப்பாறியபின் மீண்டும் பயணத்தைத் தொடரவே அவர் அவற்றை நம் வழியில் வைக்கிறார்.*

இறுதியாக, நம்முடைய பரிசுத்த ஆண்டவர் புண்ணியங்களின் அரசராக இருக்கிறார். தம்முடைய பிரஜைகளாகிய நம்மிடம் அவர் தம்முடைய புண்ணியங்கள் பிரதிபலிப்பதையும், அவை நம்மில் ஒளிவீசிப் பிரகாசிப்பதையும் காண ஏங்குகிறார். இந்தப் புண்ணியங்கள் அனைத்திற்கும் நமக்கு மாதிரிகையாகவும், மேல்வரிச் சட்டமாகவும் இருக்கிற தம்முடைய திவ்ய மாதாவின் சகல புண்ணியங்களையும் அவர் நம்மில் காண ஏங்குகிறார். விசுவாசம், நம்பிக்கை,

தேவசிநேகம், விவேகம், நீதி, திடம், மட்டுத்திட்டம், தாழ்ச்சி, கீழ்ப்படிதல், கற்பு, பொறுமை, பிறர்சிநேகம் போன்ற புண்ணியங்களாகிய கனிகள் தரும் நல்ல மரங்களாக நாம் இருக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார்.

சரி, இவ்வுலகில் இவ்வாறு மாசற்றவர்களாக அல்லது உத்தம மனஸ்தாபமுள்ளவர்களாக இருப்பதாலும், நம் சிலுவைகளைச் சுமந்துகொண்டு, அவரைப் பின்செல்வதாலும், அவருடைய வும், அவருடைய திருமாதாவுடையவும் புண்ணியங்களை நம்மில் பிரதிபலிப்பதாலும் நமக்கு வரும் நன்மை என்ன? அது எவ்வகையிலும் மிக மேலான நன்மைதான்! அது மனித புத்திக்கு எட்டாதது; அர்ச். அகுஸ்தினாராலும் கூட அறியப்படாதது; அப்போஸ்தலர் இதைக் குறித்து, ''சர்வேசுரன் தம்மை நேசிக்கிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணியிருக்கிறவைகளைக் கண் கண்டதுமில்லை; காது கேட்டதுமில்லை; மனிதருடைய இருதயத்திற்கு அவைகள் எட்டினது மில்லை'' என்கிறார். ஆம், அதுவே நம் இரட்சகரும், ஆண்டவருமானவர் நித்தியத்திற்கும் அரசாளுகிற பரலோக இராச்சியமாகும். இவ்வுலகில் அவருடைய திருப்பாடுகளில் பங்கு பெற்றவர்கள் அந்தப் பரலோக இராச்சியத்தில் சர்வேசுரனுடைய சுவீகார மக்களாகவும், கிறீஸ்துநாதரோடு இணைந்து அவருடைய வாரிசுகளாகவும், என்றென்றும் அரசாள்வார்கள்.

பொதுத் தீர்வையின் நாளில் அவர் இரக்கத்தின் அரசராக அல்ல, மாறாக, நீதியின் அரசராக பூமியின்மீது எழுந்தருளி வருவார். இப்போது அவருடைய இரக்கத்தைப் பிரதிபலித்தவர்கள் அப்போது அவருடைய நீதியின் பயங்கரத்திற்குப் பயப்பட வேண்டியிருக்காது. அவருடைய நீதியுள்ள கடுங்கோபத்தின் உக்கிரமுள்ள நெருப்பு அவர்களைச் சுட்டெரிக்காது. மாறாக, நித்தியத்திற்கும் அவரோடு அரசாளும்படி, அவர் பிறகே பரலோகத்திற்கு ஏறிச் செல்வதில் அவர்கள் புத்திக்கெட்டாத அக்களிப்புக்கொள்வார்கள்.

ஆகவே, அன்பர்களே, இவற்றையெல்லாம் மனதில் கொண்டு, எப்போதும் தேவ இஷ்டப் பிரசாத அந்தஸ்தில் நிலையாயிருந்து, நம் சிலுவைகளைப் பொறுமையோடும், சாத்தியமானால், ஆர்வத்தோடும் ஏற்றுக்கொண்டு, புண்ணியங்களிலும், இறுதி நாளில் அவர் நம்மிடம் கேட்கும் பிறர்சிநேகத்திலும் வளர்ச்சி பெற்று, நம்முடைய பரலோக பூலோக அரசரின் ஆட்சியுரிமையில் பங்குபெறுவோமாக.

*கிறீஸ்து அரசர் திருநாள்: அக்டோபர் **29**.* *மரியாயே வாழ்க!*

தேவதாயாரின் அன்பைப் பெற முடியாதவர்கள் என்று உலகில் யாருமில்லை!

கடவுளிடம் திவ்ய கன்னிகை கொண்டுள்ள மேலான வல்லமையை அறிந்திருப்பவர்களும், பூமியின்மீது வசிப்பவர்களில், தேவதாயாரின் தயவிரக்கத்திலும், உபகாரத்திலும் பங்கெடுக்காதவர்கள் யாருமில்லை என்னும் அளவுக்கு மாமரி இரக்கத்தில் செல்வச் செழிப்புள்ளவர்களாகவும், இரக்கத்தால் முழுமையாக நிரம்பியவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதை அறிந்திருப்பவர்களுமாகிய நாம், இந்த இராக்கினியில் கொள்ளும் நம்பிக்கை எவ்வளவு பெரியதாக இருக்க வேண்டும்! நம் திவ்ய இராக்கினியே இதை அர்ச். ப்ரிட்ஜத்தம்மாளுக்கு வெளிப்படுத்தினார்கள்: **"நான் பரலோக இராக்கினியாகவும், இரக்கத்தின் மாதாவாகவும், நீதிமான்களின் சந்தோஷமாகவும், பாவிகள் கடவுளிடம் கொண்டு வரப்படுகிற வாசலாகவும் இருக்கிறேன். என் இரக்கத்திலிருந்து விலக்கப்படும் அளவுக்கு சபிக்கப்பட்ட எந்தப் பாவியும் பூலோகத்தில் இல்லை"** என்று நம் அன்னை அவளிடம் கூறினார்கள். (மரியாயின் மகிமைகள் என்னும் நூலிலிருந்து.)

பாவப் பழக்கம்

"பாவத்தைச் செய்கிறவன் பசாசின் மகனாயிருக்கிறான்" என்கிறார் அர்ச். அருளப்பர் (1அரு. 3:8). இது எல்லாப் பாவிகளுக்கும் பொருந்தும் என்றாலும், வழக்கப் பாவிகளுக்கு, அதாவது, ஏதாவது ஒரு பாவப் பழக்கத்தில் சிக்கியிருப்பவர்களுக்கு இது அதிகமாகப் பொருந்தும். ஆகவே, இந்தப் பரிதாப நிலையில் விழும் ஆபத்தில் இருப்பவர்களை எச்சரிப்பது, அல்லது ஏற்கெனவே அதில் விழுந்துவிட்டவர்களுக்கு அதிலிருந்து தப்ப வழிகாட்டுவது, இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பாவப் பழக்கத்தின் விளைவுகள்

திரும்பத் திரும்ப ஒரே பாவத்தில் விழுவதன் மூலம் அதைப் பழக்கமாக்கிக் கொள்ளுதல் என்பதையே நாம் பாவப் பழக்கம் என்று அழைக்கிறோம். இப்படிப்பட்ட ஒரு பாவி, தனது பாவப் பழக்கத்தின் மிக ஆபத்தான விளைவுகளின் காரணமாக, மிகப் பரிதாப நிலையில் இருக்கிறான்.

1. பாவப் பழக்கம் ஒருவனைக் குஷ்ட ரோகியை விட அதிகம் புலம்புதலுக்குரிய நிலையில் வைக்கிறது. அவனது ஆத்துமம் பாவப் புண்களாலும், அழுகல்களாலும் மூடப்பட்டுள்ளது. ஏனெனில் ஆத்துமத்தை உருக்குலைக்கிற பாவம் மிக அருவருப்பான உடல் நோயை விட மிக அதிக அருவருப்புக்குரியதாக இருக்கிறது. ஆனால் அவனுடைய பாவப் பழக்கம் இன்னும் ஏராளமான பாவங்களுக்குள் அவனை இழுத்துக்கொள்கிறது. உதாரணமாக, வழக்கமாக ஆணையிடுபவன், தேவதூஷணம் சொல்பவன், குடிவெறியன் அல்லது சரீர இச்சைக்கு அடிமையானவன் போன்ற வழக்கப் பாவி இன்னும் எவ்வளவு அதிகமான பாவங்களில் விழுகிறான் என்று யாரால் கணக்கிட்டுச் சொல்ல முடியும்? அது அவனை ஆளுகிறது; அவனுடைய வாழ்வு உடைக்கப்படாத ஒரு பாவச் சங்கிலியாக இருக்கிறது. இதனால் அவன் கடவுளின் கண்களில் அதிக அருவருப்புக்குரியவனாக இருக்கிறான்.



2. மற்றொரு ஆபத்தான விளைவு: ஆழமான புண்களைப் பொருக்கு மூடுகிறது. இந்நிலையில் புண் அதிக வலி தருவதில்லை. ஆயினும் அது உள்ளுக்குள் புரையோடி உயிருக்கே ஆபத்தை விளைவிக்கக்கூடும். வழக்கப் பாவியின் ஆத்துமம் ஓராயிரம் காயங்களால் இரத்தம் வடிக்கும் அதே நேரம், அசட்டைத்தனம் என்னும் ஆபத்தான பொருக்கு அவற்றை மூடுகிறது. இவ்வாறு, பாவ உணர்வையும், தன் ஈன நிலை பற்றிய உணர்வையும் அவன் இழந்து, அடுத்திருக்கிற ஆபத்தைப் பற்றிய அசட்டைத்தனமுள்ளவனாக அவன் மாறுகிறான். ஏனெனில் வழக்கப் பாவத்தால் தூண்டப்படும் மற்ற பாவங்கள் அவனுடைய மனச்சான்றை மரத்துப் போகச் செய்வதால், தன் பாவங்களின் பாரத்தை அவன் உணர்வதில்லை. இவ்வாறு தன் பாவ நிலையில் அவன் கவலையின்றித் தொடர்ந்து வாழுகிறான்; தன் பாவங்களுக்காக வெட்கப்பட்டு, அவற்றை வெறுப்பதற்குப் பதிலாக, அவற்றைப் பற்றி அவன் சில சமயங்களில் பெருமைகொள்ளவும் செய்கிறான். தங்கள் இச்சையின் பாவங்களைப் பற்றிப் பெருமைப்பட்டு, அதைப் பற்றி வெளிப்

படையாகப் பேசும் பாவிகளை நாம் பார்த்ததில்லையா? இதைக் குறித்து இஸ்பிரீத்துசாந்து வானவர், "அக்கிரமி பாவப் பாதாள அடியில் வந்தபின் அதை அலட்சியம் செய்வான்" என்றும் (பழ. 18:3), "(இவர்கள்) தீமைசெய்யுங்கால் சந்தோஷிக்கிறார்கள்; மிக துஷ்ட கிரியைகளில் அக்களித்துக்கொண்டிருக்கிறார்கள்" (பழ.2:14) என்றும் கூறுகிறார்.

3. வழக்கப் பாவிகள் அனைவரும் இந்தப் பரிதாப நிலைக்கு வந்து சேராமலிருக்கலாம், ஆனால், அவர்கள் அனைவரும் பாவத்தின் சங்கிலிகளால் கட்டப்பட்டிருக்கிறார்கள். ஏனெனில், பாவப் பழக்கம் என்பது பாவத்தை ஓர் இரண்டாவது சுபாவமாகவும், உயிர் வாழ அவசியமான ஒரு வகைத் தேவையைப் போலவும் ஆக்கிவிடுகிறது என்பது அதன் மூன்றாவது விளைவாகும். ஒரு கட்டத்திற்குப் பிறகு, அவன் எந்தத் தூண்டுதலும், சோதனையுமின்றியும், தன் சித்தத்திற்கு எதிராகவும், பாவப் பழக்கத்தின் உள்ளரங்க வலிமையால் மட்டுமே ஏவப்பட்டுப் பாவம் செய்யும் அளவுக்கு அது படிப்படியாக மனிதனை ஆக்கிரமிக்கிறது. இத்தகைய மனிதர்களின் இரட்சணியம் மிக மோசமான ஆபத்தில் இருக்கிறது என்பது தெளிவு. இவர்களுடைய நிலை ஒரு பாதாளத்தில் படிப்படியாக இறங்குபவனும், அளவுக்கு மீறிய கஷ்டமும், ஆபத்துமின்றி, மேலே ஏறி வர வழி அறியாதவனுமாகிய ஒரு மனிதனின் நிலைக்கு ஒப்பாயிருக்கிறது.

4. பொதுவாக, தேவத்திரவிய அனுமானங்களாகிய மிகுந்த வல்லமையுள்ள தீர்வுகளும் கூட, அவனுக்குப் பயனளிக்கத் தவறி விடுகின்றன என்பது வழக்கப் பாவ நிலையை இன்னும் மோசமாக்குகிறது. பல வழக்கப் பாவிகள் இன்னும் விசுவாசமும், ஓரளவு வேத அனுசரிப்பும் உள்ளவர்களாக அவ்வப்போது தேவத்திரவிய அனுமானங்களைப் பெறுகிறார்கள். ஆயினும், இந்த வரப்பிரசாத வழிகள் தங்களையும் மீறி, வழக்கப் பாவிகளுக்குப் பலனற்றுப் போகின்றன, அல்லது குறைந்தபட்சம் நலம் தரும் நிரந்தரப் பலன் எதுவும் தராமல் போகின்றன. ஏனெனில், அவர்கள் உண்மையான மனஸ்தாபமோ, மனந்திரும்பும் உறுதியான பிரதிக்கினையோ இன்றி, தகுதியற்ற விதமாக, அல்லது, பலனற்ற முறையில் அவைகளைப் பெறுகிறார்கள்.

5. வழக்கப் பாவி இறுதியாக, இனி தன்னால் திருந்த முடியும் என்ற நம்பிக்கையை முழுவதுமாக இழந்து, கட்டுப்படுத்தப்படாத தனது ஆசாபாசங்களுக்குத் தன்னைக் கையளித்து விடுகிறான். பாவப் பழக்கம் தன் அடிமையை இறுதியாக இந்த நிலைக்குத்தான் கொண்டு வருகிறது. தான் எவ்வளவுதான் முயன்றும் திரும்பத் திரும்பத் தன் வழக்கப் பாவத்தில் விழுவதைத் தடுக்க முடியவில்லை என்பதை அவன் காணும்போது, சோதனை அவனை எளிதாக மேற்கொண்டு, இனி மீள முடியாதபடி அவனுடைய ஆசாபாசங்களுக்கு அவனை அடிமையாக்கி விடுகிறது.

தீர்வுகள்

1. பாவப் பழக்கத்தில் விழுந்துவிடாதபடி ஒருவனைக் காப்பாற்றும் வழி, முதலாவதாக, ஒவ்வொரு சாவான பாவத்தையும் கவனமாகத் தவிர்ப்பதில் அடங்கியுள்ளது; இரண்டாவதாக, ஒருவன் சாவான பாவத்தில் விழ நேர்ந்தாலும், அதிலேயே விழுந்து கிடக்காமல், உடனே எழுந்து, நல்ல பாவசங்கீர்த்தனத்தின் மூலம் கடவுளோடு மீண்டும் ஒன்றிப்பதில் அது அடங்கியுள்ளது. விழுந்தபின் உடனே முயன்று எழுபவன் எளிதில் பாவப் பழக்கத்தில் அகப்பட மாட்டான், ஏனெனில் பாவசங்கீர்த்தனம் பாவத்தில் திரும்பத் திரும்ப விழுவதற்கு எதிரான மிகச் சிறந்த மருந்தாக இருக்கிறது. தகுதியுள்ள முறையில் பெறப்படும் பச்சாத்தாபமாகிய தேவத் திரவிய அனுமானம், பாவியைத் தேவ இஷ்டப்பிரசாத அந்தஸ்தில் மீண்டும் ஸ்தாபிப்பது மட்டுமின்றி, பாவத்தில்

விழாதபடி அவனைக் காக்கக்கூடிய உதவி வரப்பிரசாதங்களையும் அவன் பெற்றுக்கொள்கிறான். திவ்ய நன்மை ஆத்துமத்தின் சுபாவத்திற்கு மேலான உயிரைப் பாதுகாக்கிறது. ஆகவே, ஆன்ம உயிரை அகற்றுகிற சாவான பாவத்திலிருந்து நம்மைப் பாதுகாப்பது திவ்ய சற்பிரசாதத்தின் முதன்மையான பலனாக இருக்கிறது.

2. ஆனால் ஏற்கனவே பாவப் பழக்கத்தில் சிக்கியிருப்பவர்கள் முதலில் தங்கள் பரிதாபத் திற்குரிய நிலையின் ஆபத்தை நன்கு உணர வேண்டும்; இந்த நிலையிலிருந்து தப்பிப்பது எளிதான காரியம் என்று அவர்கள் நினைக்கக் கூடாது. இது ஒரு மிக ஆபத்தான மாயத் தோற்றமாக இருக்கும். அவர்கள் **ஆர்வத்தோடும், உறுதியோடும், தொடர்ச்சியாகவும், கடவுளின் உதவியோடும்,** பாவப் பழக்கச் சங்கிலிகளிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ளப் போராட வேண்டும்.

ஆகவே, வழக்கப் பாவி செய்ய வேண்டிய முதல் காரியம் அவன் தனக்குள் நுழைந்து, இது வரை தான் நடந்து வந்த பாதை நரகத்திற்கான நேரடி வழி என்பதைக் கண்டுணர வேண்டும். தன்னுடைய பாவப் பழக்கத்தின் அழிவுக்குரிய விளைவுகளைப் பற்றிச் சிந்தித்தாலே இதை அவன் எளிதாகச் செய்துவிட முடியும்.

இரண்டாவது படி, தேவ வரப்பிரசாதத்திடம் தன்னை அவன் ஒப்புவித்து (இது அவனுக்கு ஒருபோதும் குறைவுபடாது!), என்ன பரித்தியாகம் அல்லது முயற்சிகள் வேண்டியிருந்தாலும் அவற்றைச் செய்து, பாவ விலங்குகளை உதறித் தள்ளுவதாக அவன் உறுதியான மனதோடு பிரதிக் கினை செய்ய வேண்டும். இப்படிப் பிரதிக்கினை செய்தபின், ஒரு நல்ல பாவசங்கீர்த்தனத்திற்கு அவன் தன்னை ஆயத்தம் செய்ய வேண்டும். பெரும்பாலான சமயங்களில், அவன் ஒரு பொதுப் பாவசங்கீர்த்தனம் செய்வது அவசியமானதாக இருக்கும். அதில் அவன் தன் வாழ்வு முழுவதிலும் செய்த பாவங்களை, அல்லது குறைந்தபட்சம், பாவப் பழக்கத்திற்குத் தான் அடிமையாயிருந் துள்ள காலத்தில் செய்த பாவங்களை அவன் அறிக்கையிட வேண்டும். இத்தகைய முழுமையான பாவசங்கீர்த்தனத்தால், அவன் தேவ வரப்பிரசாதத்துடன் இருதய சமாதானத்தாலும், தேவ நம்பிக்கையாலும், ஆண்மையுள்ள தைரியத்தாலும், சொல்ல முடியாத மகிழ்ச்சியாலும் நிரப்பப்படுவான். இப்போது அவன் தனது இறுதிக் கதிக்குரிய சரியான வழியில் இருக்கிறான்.

இரட்சணியப் பாதையில் நிலைத்திருப்பதாகிய அனைத்திலும் கடினமான மூன்றாவது வேலையைச் செய்வதற்கு, அவன் அசாதாரணமான அக்கறையோடு வரப்பிரசாத வழிகளைப் பயன்படுத்த வேண்டும்; எல்லாவற்றிற்கும் மேலாக, அவன் ஜெபிக்கவும் அடிக்கடி தேவத்திரவிய அனுமானங்களைப் பெறவும், பாவ சந்தர்ப்பங்களைத் தவிர்க்கவும் வேண்டும். அவன் தன் அனுதின ஜெபங்களை ஒழுங்காகவும் பக்தியோடும் சொல்ல வேண்டும்; ஞாயிறு பூசையில் தவறாமல் பங்குபெற்று, திவ்ய நன்மை உட்கொள்ள வேண்டும்; சோதனையின்போது, ஜெபத் தின் மூலம் கடவுளிடமும், சேசுவின் திரு இருதயத்திடமும், அவருடைய பரிசுத்த மாதாவிடமும் தன்னை ஒப்புக்கொடுத்துவிட அவன் தவறக்கூடாது. அப்போது, இரட்சகருடைய நீரூற்றுகளில் இருந்து அவன் தனக்குத் தேவையான பலத்தை முகந்துகொள்வான். தான் ஒரு மோசமான நோயாளி என்பதை உணர்ந்து, மேற்கூறிய ஆன்ம மருத்துவ சிகிச்சைகளை அவன் செய்துகொண் டால், நித்தியப் பேரின்பம் அவனுக்குத் தூரமாக இருக்காது.

(Sermons for Sundays and Chief Festivals என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது)

மரியாயே வாழ்க!

உன்னத ஜீவியராகிய சர்வேசுரன்

கடவுள் அளவற்ற உத்தமதனமுள்ள உன்னத ஜீவியராயிருக்கிறார். அவரே சகலத்தையும் படைத்து, இருத்தலில் அவற்றைப் பராமரித்து வருகிறார்.



1. மனிதர்களும், மிருகங்களும், நட்சத்திரங்களும், கிரகங்களுமாகிய அனைத்தையும் கடவுளே உண்டாக்கினார். அது மட்டுமல்ல, அவரே அனைத்தையும் பராமரித்து வருகிறார். கடவுள் தாம் படைத்தவற்றிடமிருந்து தம்முடைய திருக்கரத்தை விலக்கிக் கொள்வார் என்றால், அனைத்தும் நம் எண்ணத்தை விட அதிக விரைவாக ஒன்றுமில்லாமைக்குள் விழுந்து மறைந்து போகும். காரணமின்றி, விளைவுகள் ஏதும் இருக்க முடியாது.

"எல்லாருக்கும் உயிரையும் சுவாசத்தையும் இன்னும் சகலத்தையும் தந்தருளுகிறவர் அவரே" (அப். நட. *17:25*); "பரலோகத்திலும் பூலோகத்திலும் காணப்பட்டவைகளும், காணப்படாதவைகளுமான சகலமும் இவருக்குள் சிருஷ்டிக்கப்பட்டன" (கொலோ. *1:16*).

2. சகல நாடுகள் மற்றும் இனங்களின் பாரம்பரியங்களும் கடவுள் இருக்கிறார் என்ற கருத்தை ஆதரிக்கின்றன. காட்டுமிராண்டிகளும், நாகரீக உலகினின்று மிகத் தொலைவாக இருப்பவர்களும், மிகுந்த இழிநிலையில் உள்ளவர்களுமான அஞ்ஞானிகளுக்கு மத்தியிலும் கூட, யார்மீது மனிதன் சார்ந்திருக்கக் கூடுமோ, அந்த உன்னத ஜீவியராக அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு (பொய்த்) தெய்வத்தின் வழிபாடு தவறாமல் இருக்கிறது. ஆட்சியாளர்களோ, சட்டங்களோ, குடியிருப்புகளோ இல்லாத, நரமாம்சம் தின்னும் காட்டுமிராண்டிகளான மக்களினங்கள் கூட இருக்கிறார்கள், ஆனால் ஜெபத்தாலும், பலிகளைக் கொண்டும் தாங்கள் வழிபடுகிற ஏதாவது ஒரு (பொய்த்) தெய்வம் இல்லாமல் அவர்கள் ஒருபோதும் காணப்பட்டதில்லை.

கடவுள் உன்னத ஜீவியராயிருக்கிறார் என்று நாம் சொல்வதன் பொருள் என்ன?

கடவுள் உன்னத ஜீவியராயிருக்கிறார் என்று நாம் சொல்லும்போது, அவர் எல்லாப் படைப்புகளுக்கும் மேலானவர் என்றும், சுயஞ்ஜீவியரும், அளவற்ற உத்தமதனமுள்ள அரூபியாகவும் அவர் இருக்கிறார் என்று நாம் கூறுகிறோம். "ஆதியும் நாமே, அந்தமும் நாமே, நம்மையல்லாது வேறு தெய்வமில்லை" (இசை. *44:6*).

அரூபி என்பது என்ன?

அரூபி என்பது புத்தியும், சுயாதீன சித்தமும் உள்ளதும், ஆனால் சரீரமில்லாததும், ஒருபோதும் சாகாததுமான ஒரு உயிருள்ள வஸ்துவாக இருக்கிறது.

1. கடவுள் சுத்த அரூபியாக இருக்கிறார். கடவுளுக்குச் சரீரமில்லை என்பதால், நாம் அவருடைய கண்களையும், கரங்களையும் பற்றிப் பேசும்போது, நம்முடைய மனிதப்

பேச்சு முறையில், அவர் சகலத்தையும் காண்கிறார், அனைத்தையும் செய்கிறார் என்பது நமக்கு நன்கு புரியும்படியாக, ஓர் உருவக முறையில் மட்டுமே இப்படிப் பேசுகிறோம். "சர்வேசுரன் ஞான வஸ்துவாயிருக்கிறார். ஆதலால் அவரை ஆராதிக்கிறவர்கள் ஞானத்திலும் உண்மையிலும் ஆராதிக்கவேண்டும்" (அரு.4:24) என்று நம் ஆண்டவர் சமாரியப் பெண்ணிடம் கூறினார். என்றாலும், மனிதர் காணும்படி கடவுள் சில சமயங்களில் காணக்கூடிய வடிவங்களை எடுத்திருக்கிறார். உதாரணமாக, சேசுநாதரின் ஞானஸ்நானத்தின்போது அவர் புறாவின் வடிவமெடுத்து அவர்மீது இறங்கி வந்தார்; பெந்தேகோஸ்தே திருநாளன்று அவர் அக்கினி நாக்கு ரூபமாக இறங்கி வந்தார். கடவுள் புறாவுமல்ல, அக்கினி நாக்குமல்ல. அவர் நம் ஊனக் கண்களால் காணப்படும்படி, அந்த வடிவங்களை மட்டுமே எடுத்துக்கொண்டார்.

2. சம்மனசுக்களும், பசாசுக்களும் சுத்த அரூபிகளாயிருக்கிறார்கள். மனிதர்கள் ஒரு பகுதி மட்டுமே அரூபத்தன்மை உள்ளவர்களாயிருக்கிறார்கள். ஏனெனில் அவர்களுக்கு ஒரு சரீரம் இருக்கிறது. மனிதனின் ஆத்துமம் ஓர் அரூபியாகவும், முற்றிலும் பருப்பொருளைச் சாராததாகவும், படைப்புகளால் அழிக்கப்பட இயலாததாகவும் இருக்கிறது. அரூபிகள் என்ற முறையில், வெவ்வேறு அளவுகளில் என்றாலும், கடவுளும், மனித ஆத்துமமும் இதைப் பொதுவாகக் கொண்டிருக்கிறார்கள்; இருவரும் புத்தியையும், அறிவையும், சுயாதீன சித்தத்தையும் கொண்டிருக்கிறார்கள். தன் சுயாதீன சித்தத்தைக் கொண்டு மனிதன் தன்னைப் படைத்தவராகிய சர்வேசுரனை வெளிப்படையாக எதிர்த்து நிற்கக்கூட வல்லவனாக இருக்கிறான்!

கடவுள் சுயஞ்ஜீவியராக இருக்கிறார் என்று நாம் சொல்வதன் பொருள் என்ன?

கடவுள் சுயஞ்ஜீவியராக இருக்கிறார் என்று நாம் சொல்லும்போது, தம்முடைய இருத்தலுக்காக அவர் வேறு யாருக்கும் கடன்பட்டவரல்ல, அவர் யாரையும் சார்ந்திருக்கவில்லை என்று நாம் சொல்கிறோம்.

1. சர்வேசுரன் மோயீசனை நோக்கி: "நாமே இருக்கிறவர்" என்றார் (யாத்.3:14). அவர் தம்மைக் கொண்டே ஜீவிப்பவராக இருக்கிறார், தம்முடைய இருத்தலை அவர் வேறு யாரிடமிருந்தும் பெற்றுக்கொள்வதில்லை, அவரே அனைத்திற்கும் ஆதிகாரணராக இருக்கிறார். மற்றெல்லா உயிர்களும், பொருட்களும் தங்கள் இருத்தலுக்காகக் கடவுளுக்குக் கடன்பட்டிருக்கின்றன. அவரோடு ஒப்பிடும்போது, நாம் ஒன்றுமில்லாமையாக இருக்கிறோம்.

2. மனிதன் கடவுளைப் பற்றிய முழுமையான அறிவை ஒருபோதும் கொண்டிருக்க முடியாது. மனிதன் அளவுக்கு உட்பட்டவன், அதனால் அளவற்றவரை முழுமையாகப் புரிந்துகொள்ள அவனால் இயலாது. அளவற்றவராகிய கடவுளை மனிதன் முழுமையாகப் புரிந்துகொள்வதை விட, ஒரு சிறு கிண்ணம் மிகுந்த விஸ்தாரமுள்ள கடல் முழுவதையும் தனக்குள் அடக்கிக்கொள்வது அதிக எளிதாயிருக்கும். காரியங்களின் ஒழுங்கு, இணக்க நிலை மற்றும் இருத்தலில் இருந்தும், நம் மனச்சான்றிலிருந்தும், மனிதனுக்குக் கடவுளே தந்துள்ள வெளிப்பாடுகளிலிருந்தும் நாம் அவரை ஓரளவுக்கு மட்டும் அறிந்துகொள்கிறோம்.

கடவுள் அளவற்ற உத்தமதனமுள்ளவராயிருக்கிறார் என்பதன் பொருள் என்ன?

கடவுள் அளவற்ற உத்தமதனமுள்ளவராயிருக்கிறார் என்று நாம் சொல்லும்போது,

அவர் சகல தேவ இலட்சணங்களையும், எந்த அளவுமின்றி, சம்பூரணமாய்க் கொண்டிருக் கிறார் என்று சொல்கிறோம். கடவுள் வரம்புகளுக்கு உட்படாதவராகவும், நித்தியராகவும் இருக்கிறார், அவர் "கரைகளற்றதும், அடியற்றதுமான பெருங்கடலாக," இருக்கிறார்.

1. சர்வேசுரன் எவ்வளவு மிகப் பெரியவராகவும், அற்புதமானவராகவும் இருக்கிறார் என்றால், தம்மை இன்னும் பெரிதாக்க அல்லது அதிக அற்புதமானவராக்க எதுவும் தேவை யற்றவராக அவர் இருக்கிறார். அவர் எண்ணிலடங்காதவையும் ஏராளமானவையும், வரம்புக்கு உட்படாதவையும், மட்டற்றவையுமான சகல தேவ இலட்சணங்களையும் சொந்தமாகக் கொண்டிருக்கிறார். அவரே அனைவரிலும் உத்தமதனத்தின் காரணராக இருக் கிறார். கடவுள் தாம் ஏற்கனவே இருப்பதைவிட அதிக நல்லவராகவோ, அதிக பரிசுத்த ராகவோ, அதிக உத்தமராகவோ இருக்க முடியாது.

2. கடவுள் அளவற்ற விதமாய்ப் புத்திக்கு எட்டாதவராகவும், முற்றிலுமாகப் புரிந்து கொள்ளப்பட இயலாதவருமாயிருக்கிறார். கடவுள் தம்மைப் பற்றியே தந்துள்ள வெளிப் பாடுகளைப் புத்தி சரிபார்க்க முடியும். ஆனால் நாம் இக்காரியத்தில் நம் அறிவையோ, உணர்ச்சிகளையோ முடிவான அதிகாரம் உள்ளவையாக ஆக்குவோம் என்றால், நாம் நம்மையே நம் சொந்தக் கடவுளாக ஆக்கிக் கொண்டு, சுபாவத்திற்கு மேலான, அளவற்ற சர்வேசுரனை நோக்கிச் செல்லும் பாதையை நமக்கு நாமே அடைத்து விடுகிறோம்.

3. சிருஷ்டிகருக்குச் சொந்தமான ஏதோ ஒன்று, அவருடைய இருத்தலின் ஏதோ ஒரு சாயல், ஒவ்வொரு படைப்பிலும் காணப்படக் கூடும் என்றாலும், அவர் படைப்புகள் அனைத்திற்கும் மேற்பட்டவராயிருக்கிறார். ஆனால் பக்திச்சுவாலகர் முதல் அற்பமான அந்துப்பூச்சி வரை, எல்லாப் படைப்புகளும் தங்கள் எல்லா வல்லமைகளையும், இலட் சணங்களையும் ஒன்றாகச் சேர்த்தாலும்,சர்வேசுரனுடைய மேலான மகத்துவத்தின் ஒரு பலவீனமான நிழலாக மட்டுமே அது இருக்கும்.

சர்வேசுரனுடைய சில தேவ இலட்சணங்கள் என்ன?

சர்வேசுரனுடைய சில தேவ இலட்சணங்கள்: அவர் (அ) நித்தியராயிருக்கிறார், (ஆ) சகல நன்மைச் சுரூபியாயிருக்கிறார், (இ) சகலத்தையும் அறிகிறவராயிருக்கிறார், (ஈ) அவர் எங்கும் வியாபித்திருக்கிறார், (உ) அவர் சர்வ வல்லபராயிருக்கிறார் என்பவையாகும்.


கடவுளின் திவ்ய இலட்சணங்கள் அவரில் தனியாக இருப்பதில்லை, மாறாக, அவை அவரோடு ஒரே பொருளாக ஒன்றித்திருக்கின்றன. அவை அவருடைய ஒரே சுபாவம் மட்டும் உத்தமதனத்தின் பல்வேறு வெளிப்பாடுகளாக மட்டுமே இருக்கின்றன. உதாரணமாக, சர்வேசுனுடைய நன்மைத்தனம் அவருடைய ஞானத்தோடும், வல்லமையோடும் ஒரே பொருளாயிருக்கிறது. அவருடைய தெய்வீக இலட்சணங்கள் அவரில் ஒன்றாக, ஒரே பொருளாயிருப்பது தவிர, அவை அவருக்கு ஒப்பானவையாகவும் இருக்கின்றன: அதாவது, கடவுள்தாமே அளவற்றதனமாகவும், ஞானமாகவும், நன்மைத்தனமாகவும், வல்லமை யாகவும் இருக்கிறார். (தொடரும்)

("My Catholic Faith" என்ற நூலிலிருந்து மொழிபெயர்த்துத் தொகுக்கப்பட்டது.)

அர்ச். குப்பர்த்தினோ சூசையப்பர்

அர்ச். குப்பர்த்தினோ சூசையப்பர் இத்தாலியைச் சேர்ந்த பிரான்சிஸ்கன் துறவியாவார். இவர் கத்தோலிக்கக் காட்சிதியானிகளில் ஒருவராவார். இவர் முதலில் அப்புலியா பிரதேசத்திலும், அதன்பின் நேப்பிள்ஸ் இராச்சியத்திலும் இருந்ததும், இப்போது இத்தாலியின் லெக்சே மாகாணத்தில் உள்ளதுமான குப்பர்த்தினோ என்ற கிராமத்தில் ஃபெலீஸ் தேஸா, ஃப்ரென்செஸ்கா பனாரா என்பவர்களுக்கு மகனாகப் பிறந்தார். அவரது தந்தை அவர் பிறப்பதற்கு முன்பே இறந்து விட்டார். ஆனால் அவர் தம் குடும்பத்திற்குப் பெரும் கடன் சுமையை விட்டுச் சென்றார். மிகக் கடும் தரித்திரத்தில் அவரது தாய் ஒரு தொழுவத்தில் அவரைப் பெற்றெடுத்தாள்.

குழந்தையாயிருந்தபோதே சூசை பரவசக் காட்சிகளை அனுபவிக்கத் தொடங்கினார். இவை அவரது வாழ்வு முழுவதும் நீடித்தன. விரைவில் அவர் காலணிகள் தயாரிப்பவரான தம் மாமனிடம் வேலைக்குச் சேர்ந்தார். ஆயினும், துறவற வாழ்வின் மீதான தாகத்தால் ஈர்க்கப்பட்டவராக, அவர் 1620-ஆம் ஆண்டில் அவர் பிரான்சிஸ்கன் சிறிய சகோதரர்கள் சபையில் சேர விண்ணப்பித்தார். ஆனால் கல்வியறிவின்மை காரணமாக அவர் நிராகரிக்கப்பட்டார். அதன்பின் அவர் டாராண்ட்டோவுக்கு அருகிலுள்ள மார்ட்டினோவைச் சேர்ந்த கப்புச்சின் சகோதரர்கள் சபையில் சேர விண்ணப்பித்தார். அவர்கள் 1620-ஆம் ஆண்டில் இவரை ஒரு பொதுநிலைச் சகோதரராக ஏற்றுக்கொண்டார்கள். ஆயினும் தொடர்ச்சியான பரவச நிலைகளால் அவர் தம் கடமைகளைச் செய்ய இயலாததால், அவர் சபையிலிருந்து விலக்கப்பட்டார்.



தம் வீட்டுக்குத் திரும்பி வந்த சூசையை அவருடைய தாய் மிக மோசமாக நடத்தினாள். இந்நிலையில் அவர் குப்பர்த்தினோ அருகிலிருந்த சிறிய சகோதரர்கள் மடத்தில், அவர்களுடைய தொழுவங்களில் வேலை செய்யத் தம்மை அனுமதிக்கும்படி கெஞ்சிக் கேட்டுக்கொண்டார். அங்கே தாம் வேலை செய்த சில வருடங்களில் அவர் தம்முடைய பக்தியாலும், எளிமையாலும் துறவிகளை எந்த அளவுக்கு ஈர்த்துவிட்டார் என்றால், அவர்கள் அவரைத் தங்கள் சபையில் ஒரு துறவியாகச் சேர்த்துக்கொண்டார்கள். அவர் ஒரு குருவாக வேண்டுமென்னும் தேவ சித்தம் 1628-ஆம் ஆண்டில் நிறைவேறியது. மார்ச் 28 அன்று அவர் குருவாக அபிஷேகம் பெற்றார். அதன்பின் குப்பர்த்தினோ கிராமத்திற்குச் சற்று வெளியே இருந்த கெபி மாதா மடத்திற்கு அவர் அனுப்பப்பட்டார். இங்கே அவர் அடுத்த 15 ஆண்டுகளைச் செலவிட்டார்.

இதன்பின் சூசையப்பர் பரவச நிலைக்கு உட்படுவது அதிகரிக்கத் தொடங்கியது. திவ்ய பலிபூசை நிறைவேற்றும்போதும், அல்லது அதில் பங்குபெறும்போதும், சகோதரர்களோடு கட்டளை ஜெபம் ஜெபிக்கும்போது அவர் காற்றில் அந்தரத்தில் எழும்பி மிதக்கத் தொடங்கினார். இதன் மூலம் அவருடைய பரிசுத்ததனத்தின் புகழ் அந்தப் பகுதியிலும், அதற்கு அப்பாலும் பரவலாயிற்று. ஆயினும் அவர் தமது மடத்தின் அமைதியைக் குலைப்பதாக அவருடைய சபை அதிகாரிகளும், திருச்சபை அதிகாரிகளும் கருதியதால், மடத்தில் சகோதரர்கள் ஒன்றுகூடும் எந்த நிகழ்ச்சியிலும் பங்குபெறாதபடி தடைசெய்யப்பட்ட அவர், ஒரு சிறு அறையில் தனிமைப்

படுத்தப்பட்டார். இப்படி அவர் அந்தரத்தில் உயர்வது பில்லிசூனியத்தோடு தொடர்புள்ள காரியம் என்று பரவலாக நம்பப்பட்டதால், சூசையப்பர் திருச்சபையின் நீதிமன்றத்தால் குற்றஞ்சாட்டப்பட்டார். அவர்களுடைய கட்டளைப்படி, அவர் கண்காணிக்கப்படும்படி முதலில் அசிசியிலும் (1639-1653), அதன்பின் சிறிது காலம் பியெத்ராரப்பியாவிலும், இறுதியாக ஃபோஸோம்ப்ரோன் நகரத்திலும் இருந்த பிரான்சிஸ்கன் மடங்களுக்கு மாறி மாறி அனுப்பப்பட்டார். ஃபோஸோம்ப்ரோனில் அவர் கப்புச்சின் துறவிகளின் மேற்பார்வையில் நான்கு ஆண்டுகள் (1653-1657) வாழ்ந்தார்.

தம் வாழ்நாள் முழுவதும் அவர் கடுமையான தவமுயற்சிகளை அனுசரித்தார்; வாரம் இரு முறை மட்டும் திட உணவு உண்டார், அப்போதும் தம் உணவுகளில் கசப்பான பொடிகளைக் கலந்தே அவற்றை உண்டார். இம்முறையில் அவர் தம்முடைய வாழ்வின் 35 ஆண்டுகளைக் கழித்தார். இறுதியாக, 1657, ஜூலை 9 அன்று, சிறிய சகோதரர்கள் மடம் ஒன்றுக்குத் திரும்பி வர அனுமதிக்கப்பட்டு, ஓஸிமோவிலிருந்த மடத்திற்கு அனுப்பப்பட்டார். அங்கே 1663, செப்டம்பர் 18 அன்று, தமது 60-ஆம் வயதில் அவர் மரணமடைந்தார். 1753, பிப்ரவரி 24 அன்று பாப்பரசர் 14-ஆம் ஆசீர்வாதப்பர் அவருக்கு முத்திப்பேறு பட்டமளித்தார். 1767, ஜூலை 16 அன்று அவர் 13-ம் கிளமெண்ட் பாப்பரசரால் அர்ச்சியசிஷ்டவராக உயர்த்தப்பட்டார்.

பரிசுத்த திருச்சபை, குப்பர்த்தினோ, ஓஸிமோ என்ற இரு நகரங்களின் பாதுகாவலராகவும், விமானிகள், விண்வெளி வீரர்கள், மன நோயாளிகள், தேர்வுகள், மாணவர்கள் ஆகியோரின் பாதுகாவலராகவும் அவரை ஏற்படுத்தியுள்ளது.

திருநாள்: செப்டம்பர் 18. *மரியாயே வாழ்க!*

அர்ச். பத்தாம் பத்திநாதர் குருக்களுக்குத் தந்த அறிவுரை!

அர்ச். பத்தாம் பத்திநாதர் வெனீஸ் நகர பிதாப்பிதாக் கர்தினாலாக இருந்தபோது, குருக்ளுக்குத் தந்த அறிவுரையாவது: “கோவில்களில் நமது குருக்கள் சொல்லும் பிரசங்கங்களால் சாதாரணமாய் நமது கிறீஸ் தவர்களுக்கு அதிக பயனுண்டாகக் கூடும் என்று நான் எண்ணுவதில்லை. ஏனென்றால் வேத காரியங்களைக் கேட்பவர் மனதில் வேரூன்றச் செய்ய அவசியமான குணங்கள் அப்பிரசங்கங்களில் காணவில்லை. படிப்பில் மேதாவித்தனமும், வாக்கில் சாதுரியமும் உள்ளவரென்று கேட்பவர் பாராட்ட அநேக மேற்கோள்களை மனப் பாடம் செய்து, வார்த்தைகளை அழகாய் அடுக்கிச் சரமாரியாய்ப் பொழிந்து விடுவதால் வேதசத்தியங்களைக் கிறீஸ்தவர்களுக்குப் படித்துக் கொடுத்து விட்டோமென்று பல குருக்கள் தங்களை ஏமாற்றிக்கொள்கிறார்கள். ஆத்தும நன்மையைத் தேடாமல் நல்ல பிரசங்கி என்ற பெயரெடுப்பதை நாடுவதால் வரும் கேடு இதுவே. மக்கள் வேத சத்தியங்களின் விளக்கத்துக்கு விருப்பத்துடன் காத்திருக்க, வீணான வார்த்தைகளை அவர்களிடம் அலப்ப லாகப் பேசி, அவர்களுடைய இருதயம் வெறுமையாகப் போக விடுகிறார்கள். நமதாண்டவர் தம்மைச் சூழ்ந்து வந்தவர்களுக்கு உபதேசித்த விதம் இதுவன்றோ! ஆண்டவரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வேதம் உபதேசிக் காமல் வாக்கு வன்மை உள்ளவன், வாய்ச்சாலகன், நிரம்பப் படித்த நிபுணன் என்னும் பெயரைப் பெரிதாய் எண்ணுபவரின் பிரசங்கம் பயனற்ற பதருக்கு ஒப்பாகும். குழந்தைகளுக்கும், இளம் பருவத்தினருக்கும் வேத சத்தியங்களை விளங்கக் கற்பிப்பதே நல்ல குருவின் முதல் கடமையாகும். இக்கடமையைக் கண்டிப்பாய்ச் செலுத்த ஆழ்ந்த படிப்பும், முன் ஆயத்தமும், நம்பிக்கையும் உள்ள ஜெபமும் அவசியம். ஆகவே குருக்கள் தங்கள் பங்கு மக்களுக்கு எளிய நடையில் இருதயத்தில் வேரூன்றும் விதமாக வேத சத்தியங்களை அடிக்கடி விளக்கிக் காட்ட வேண்டுமென்று வெகு அக்கறையுடன் அழுத்தமாய்த் தெரிவித்துக்கொள்கிறோம்.”

அர்ச். பத்தாம் பத்திநாதர் திருநாள்: செப்டம்பர் 3.

பாத்திமாவின் சூரிய நடனம் எதற்காக?

நம் வாசகர்கள் நன்கு அறிந்துள்ளது போல, 1917, அக்டோபர் 13 அன்று பாத்திமாவில் திருச்செபமாலை மாதாவின் கடைசிக் காட்சி நடந்தது. அப்போது, கூடியிருந்த 70,000க்கும் அதிகமானோர் நடனமாடும் சூரியனின் புதுமைக்குச் சாட்சிகளாக இருந்தார்கள். இந்தப் புதுமை பாத்திமாவில் தேவமாதா உண்மையாகவே காட்சியளித்தார்கள் என்பதை நிரூபித்தது மட்டு மின்றி, “நவீன காலங்களுக்கும் கடவுளுக்கும் எந்தத் தொடர்புமில்லை” என்று பிதற்றிய நாத்திகர் களுக்கும், நவீனப் பதிதர்களுக்கும் பரலோகமே தந்த, மறுக்க முடியாத சாட்சியமாகவும் இருந்தது.

இருபதாம் நூற்றாண்டின் தத்துவவாத நூல்கள் பலவற்றைப் புரட்டிப் பார்த்தால், ஜெர்மன் நாத்திகத் தத்துவஞானியான ஃப்ரெட்ரிக் நீட்ஷே என்பவனுடைய தப்பறையின் தாக்கத்தை அவற்றில் காணலாம். 1800-களில் இந்த நரக மனிதன், “கடவுள் இறந்து விட்டார்” என்று மிதமிஞ்சிய துணிவோடு அறிக்கையிட்டான்.

1917-ஆம் ஆண்டில், உலகின் பெரும்பான்மையான நாடுகளைப் போலவே, போர்ச் சுக்கல் நாடும் போருக்குள் இழுத்துக்கொள்ளப் பட்டது. முதல் உலகப் போர் ஐரோப்பா முழு வதும் பற்றியெரிந்து கொண்டிருந்த காலத் தில், போர்ச்சுக்கல் நாடு தொடக்கத்தில் அணி சாராமல் தான் வகித்து வந்த நடுநிலை யைத் தொடர்ந்து காப்பாற்ற முடியாமல், நேச நாடுகளுடன் வேறு வழியின்றிக் கூட்டுச் சேர்ந்தது. இந்தப் போரில், 2,20,000 போர்ச் சுக்கீசிய சாதாரண மக்கள் கொல்லப்பட் டார்கள். ஆயிரக்கணக் கானோர் பஞ்சத்தாலும், இன்னும் ஆயிரக்கணக்கானவர்கள் ஸ்பானிஷ் ஃப்ளூ என்னும் தொற்றாலும் இறந்தார்கள்.



சில வருடங்களுக்கு முன்தான், அதாவது 1910-ஆம் ஆண்டில், போர்ச்சுக்கலில் ஒரு புரட்சி வெடித்து, அதன் விளைவாக, சாத்தானின் இரகசிய சபையின் (Freemasonry) செல்வாக் கின் கீழ் ஒரு புதிய விடுதலைவாத ஆதரவுச் சட்டத் தொகுப்பு உருவாக்கப்பட்டது. அது பொது விசுவாசிகளிடமிருந்து விசுவாசத்தை அழித்துவிட முயன்றது. கத்தோலிக்க ஆலயங்களும், பள்ளிகளும் அரசாங்கத்தால் அபகரிக்கப்பட்டன, பொது இடங்களில் குருநிலையினர் குருத்துவ அங்கி அணிவதும், ஆலய மணிகள் அடிக்கப்படுவதும், பகிரங்கமாகக் கத்தோலிக்கத் திருநாட்கள் கொண்டாடப்படுவதும் தடைசெய்யப்பட்டது. 1911 முதல் 1916 வரை, எதிர்க் கிறீஸ்தவக் குழுக்களால் சுமார் 2,000 குருக்களும், துறவிகளும், கன்னியாஸ்திரீகளும் கொல்லப்பட்டார்கள்.

மகா பரிசுத்த கன்னிகை 1917-ல் பத்து வயது லூசியாவுக்கும், 9 வயது பிரான்சிஸ்கோ வுக்கும், 7 வயது ஜசிந்தாவுக்கும் காட்சியளித்தபோது, போர்ச்சுக்கல் நாடு இருந்த நிலை இதுதான். மாமரி உலக சமாதானத்திற்காகவும், போர் முடிவடையவும் தொடர்ந்து ஜெபமாலை ஜெபிக்கும் படியும் பாவிகளுக்காகப் பரித்தியாகங்கள் செய்யும்படியும் கேட்டுக்கொண்டார்கள். உலகின் கதியைத் தீர்மானிக்கும் ஓர் இரகசியத்தையும் நம் அன்னை குழந்தைகளிடம் ஒப்படைத்தார்கள்.

இந்தக் காட்சிகளின் நிஜத் தன்மையை மறுக்க முடியாதபடி நிரூபிக்கும் விதமாக, தனது ஆறாவது காட்சியில், ஒரு மாபெரும் அடையாளத்தைத் தான் தர இருப்பதாகத் திவ்ய கன்னிகை ஏற்கெனவே வாக்களித்தார்கள். அந்தக் குறிப்பிட்ட நாளில் (1917, அக்டோபர் 13) நடந்த அற்புதம் "சூரியப் புதுமை" என்றும், "சூரிய நடனம்" என்றும் அழைக்கப்படலாயிற்று. அது மாமரியின் மீது நாம் கொள்ளும் நம்பிக்கைக்கும் ஆதாரமாயிற்று.

அந்நாளில், விசுவாசிகளும், விசுவாசமற்றவர்களுமாகிய 70,000 பேர் மாமரி வாக்களித் ததைக் காண அங்கு திரண்டிருந்தார்கள். கொட்டித் தீர்த்துக்கொண்டிருந்த மழை திடீரென நின்றது, மேகங்கள் விலகின, ஈரமாகவும், சேறாகவும் ஆகியிருந்த தரை காய்ந்தது. சூரியனைக் காண்பவர்களின் கண்கள் பாதிக்கப்படாதபடி அதன்மீது பரலோகத் திரை ஒன்று போர்த்தப் பட்டது; அது தான் இருந்த இடத்திலேயே கற்பனைக்கெட்டாத வேகத்துடன் சுழன்றது. ஒளி பல வண்ணங்களில் பூமியை நனைத்துக்கொண்டிருந்தது. ஒரு சில நொடிகள் தான் சுழல்வதை நிறுத்திய சூரியன், மீண்டும் அசுர வேகத்தில் சுழலத் தொடங்கி, பூமியின்மீது விழப் போவதாக அச்சுறுத்தி, அவிசுவாசிகளை முழந்தாளிட்டுக் கதறச் செய்தபின் மேலேறி தன் இடத்தை அடைந்தது. அதன் திரை விலக்கப்பட்டது.

மலைப்பூட்டும் இந்தப் புதுமை நாத்திக ஆட்சியாளர்களைக் கதிகலங்கச் செய்தது. நாத்திகப் பத்திரிகையான 'ஓ சேக்குலோ' என்ற எதிர்க் கத்தோலிக்க, இரகசிய சபைப் பத்திரிகை இந்தப் புதுமை பற்றி முதல் பக்கத்தில் செய்தி வெளியிட்டது. அதே சமயம் மூன்று குழந்தை களும் உண்மையைத்தான் சொல்கிறார்கள் என்ற உண்மையின் மீது பரலோகத்தால் இடப்பட்ட முத்திரையாகவும், உத்தரவாதமாகவும் மக்கள் இந்தப் புதுமையை ஏற்றுக்கொண்டார்கள்.

பழைய ஏற்பாட்டில் யோசுவாவின் ஜெபத்தைக் கேட்டுச் சர்வேசுரன் சூரியப் புதுமை ஒன்றைச் செய்து, தாமே பரலோக, பூலோக அரசர் என்பதை நிரூபித்தார் (யோசுவா. 10:12, 13). 1917-ஆம் ஆண்டில் பரிசுத்த ஜெபமாலை மாதா சூரியனைத் தன் விளையாட்டுப் பொருளாகச் சிறிது நேரம் பயன்படுத்தி, தான் பரலோக பூலோக இராக்கினியாகப் பரிசுத்த தமத்திரித்துவ சர்வேசுரனால் முடிசூட்டப்பட்ட சத்தியத்தை யாரும் மறுக்க முடியாதபடி நிரூபித்தார்கள்.

இந்த அற்புதம் இந்த விசுவாச மறுதலிப்பின் காலத்தில், திருச்சபையின் எதிர்காலம் கடவுளால் பரிசுத்த மாமரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதையும், திருச்சபையில் நாம் இன்று காணும் எல்லா அவலங்களையும் மீறி, கணப் பொழுதில் சாத்தானின் கரங்களிலிருந்து ஆத்துமங்களையும், உலகத்தையும், திருச்சபையையும் தட்டிப் பறித்து, அதற்குச் சமாதான காலத் தைத் தர திவ்ய கன்னிகை வல்லவர்களாயிருக்கிறார்கள் என்பதையும் நிரூபிக்கிறது. நாம் செய்ய வேண்டியதெல்லாம் மாதாவை நம்புவதும், அவர்கள் கேட்டுக்கொண்டபடி ஜெபமாலை ஜெபிப் பதும், மரியாயின் மாசற்ற இருதய பக்தியாகிய முதல் சனி பக்தியைக் கடைப்பிடிப்பதுமே. அப்போது, சேசு மரியாயின் திரு இருதயங்கள் வெற்றி பெறும்.

மரியாயே வாழ்க!

செப்டம்பர் - அக்டோபர் மாதங்களின் முதல் சனி பக்தி முயற்சி பரிகாரக் கருத்துக்கள்


செப்டம்பர் : தேவமாதாவின் நித்திய கன்னிமைக்கு எதிரான நிந்தைகளுக்குப் பரிகாரமாக.

அக்டோபர்: தேவமாதா பக்தியை இளம் உள்ளங்களிலிருந்து அகற்றுகிற துரோகங்களுக்குப் பரிகாரமாக.

அசிசியின் மகா புனிதரின் பாக்கியமான மரணம்!

அர்ச். பிரான்சிஸ் அசிசியார் இறந்த சமயத்தில், அவரது புனித ஆத்துமம் மிகுந்த பிரகாச முள்ள ஒரு நட்சத்திரத்தின் வடிவில், ஒரு வெண்மேகத்தால் ஏந்தப் பட்டு, நேராக மோட்சத்தை நோக்கிச் சென்றதைச் சகோதரர்களில் ஒருவர் கண்டதாக அர்ச். பொனவெந்தூர் கூறுகிறார்.

புனிதர் இறந்த சமயத்தில், சகோதரர் அசிசியின் ஆஸ்டின் மிகக் கடுமையான நோயால் பாதிக்கப்பட்டு, தமது இறுதி நிமிடங்களில் இருந்தார். நோயால் தம் பேசும் சக்தியை இழந்திருந்த அவர் திடீரென்று, “என் தகப்பனே, இரும்; போய்விடாதீர்; நானும் வருகிறேன்” என்று உரக்கக் கூவினார். சகோதரர்கள் அவர் யாரிடம் பேசுகிறார் என்று கேட்டபோது, “என்ன! நம் தந்தை பிரான்சிஸ் மோட்சத்திற்கு எழுந்து செல்வதை உங்களால் காண முடியவில்லையா?” என்று அவர் கேட்டார். அதே கணத்தில் இவரின் ஆன்மாவும் தன் சரீரத்திலிருந்து விடுபட்டு, அசிசியாரின் ஆத்துமத்தைப் பின்தொடர்ந்து மோட்சத்திற்கு ஏறிச் சென்றது. மேலும் அர்ச். பொனவெந்தூரின் தோழர்களாகிய செலானோ தாமஸ், பெர்னார்ட் ஆகியோர், புனிதர் இறந்த நாளில், முன்பே இறந்திருந்த சிறிய சகோதரர்கள் பலரின் ஆன்மாக்கள் உத்தரிக்கிற ஸ்தலத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, அவரோடு இணைந்து மோட்சத்தில் நுழைந்தன என்று ஒரு பரிசுத்தருக்கு வெளிப்படுத்தப்பட்டதாக எழுதி வைத்துள்ளனர்.



புனிதர் இறந்த சமயத்தில் அசிசியின் ஆயர் கார்கானோ மலையில் அர்ச். மிக்கேல் அதிதூதரின் ஆலயத்திற்குத் திருப்பயணம் சென்றிருந்தார். அர்ச். பிரான்சிஸ் அவருக்குத் தோன்றி, “நான் மோட்சத்திற்குச் சென்று கொண்டிருக்கிறேன்” என்று அறிவித்தார். காலையில் ஆயர் திரும்பி வந்தபோது, மிகச் சரியாக, புனிதர் இறந்த அதே நேரத்தில்தான் அவர் தமக்கும் காட்சியளித்தார் என்பதை அவர் அறிந்துகொண்டார்.

அர்ச். பிரான்சிஸின் திருச்சரீரம், அவரது இறப்புக்குப் பிறகு, பிரமிப்பிற்கும், வணக்கத்திற்கும் உரியதாயிற்று. அது பற்றி அர்ச். பொனவெந்தூர், நேரடி சாட்சியங்களின் அடிப்படையில் பின்வருமாறு வர்ணிக்கிறார்: அவரது கரங்களிலும், பாதங்களிலும் கருப்பு நிறமான, இரும்பாலானவை போலத் தோன்றிய ஆணிகள் காணப்பட்டன. அவை அவரது தசையாலேயே உருவாக்கப்பட்டு, கரத்தின் ஒரு பக்கத்தில் அழுத்தினால் ஒரே ஆணியைப்போல, மறு பக்கம் சற்று நீண்டு வருவதைக் காண முடிந்தது. புனிதர் மிகுந்த கவனத்தோடு மனிதர் கண்களிலிருந்து மறைத்து வந்த காயங்கள் இப்போது தடுக்க யாருமின்றி, அனைவர் கண்களுக்கும் திறப்பாயிருந்தன. மனிதர் கரங்களால் உண்டாக்கப்படாததும், சேசுவின் திருவிலாவில் இருந்தது போன்றதுமான புனிதரின் விலாக் காயத்தின் நிறம் சிவப்பாக இருந்தது. அதன் விளிம்புகள் ஓர் அழகிய ரோஜாவின் தோற்றத்தை அதற்குத் தந்தன. பழுப்பு நிறமாக இருந்த தோலின் நிறம், அவர் இறந்ததும் அசாதாரணமான அளவுக்கு வெண்ணிறமாக மாறிவிட்டது. ஆண்டவர் தம் புனிதர்களுக்கு அணிவிக்கிற வெண்ணாடையை அது நினைவுபடுத்தியது. அவரது கை, கால்கள் ஒரு குழந்தையினுடையது போல, மிருதுவாகவும், எளிதாக வளையக்கூடியதாகவும் ஆகியிருந்தன. மொத்தத்தில் அவரது திருச்சரீரம், சேசுவின் திருப்பாடுகள், மகிமையான உயிர்ப்பு ஆகியவற்றின் சாயலாக விளங்கியது.

திருநாள்: அக்டோபர் 4.



மாதாவின் சூசை அச்சக புத்தக டிப்போவில் கிடைக்கும் ஞானப் புத்தகங்கள்



Cell: 94876 09983 PH : 0461 -2361989

		விலை ரூ.	தபாலில் விலை ரூ.
1.	பாரம்பரிய திருக்குடும்ப பக்திமாலை	220.00	260.00
2.	உலகின் இறுதிக்காலங்கள்	125.00	140.00
3.	திருப்பாடுகளின் வரலாறு		
4.	அனுதின ஜெபப் புத்தகம்	50.00	60.00
5.	திருப்பாடுகளின் தியானம்	90.00	100.00
6.	அறிவோம் பத்துக்கட்டளைகளை	100.00	110.00
7.	மலைமேல் பிரசங்கம்	65.00	70.00
8.	அறிவோம் அப்போஸ்தலர்களை; அர்ச். பிலவேந்திரர்	90.00	100.00
9.	ஞான உபதேசக் கோர்வை (3 பாகங்கள் அடங்கியது)	325.00	350.00
10.	மன்ரேசா (அர்ச். இஞ்ஞாசியாரின் தியானப் பிரசங்கங்களின் தொகுப்பு)	125.00	140.00
11.	கிறீஸ்துநாதர் அநுசாரம்	250.00	300.00
12.	மரியாயின் மீது உண்மை பக்தி	125.00	140.00
13.	பாத்திமா காட்சிகள்	100.00	110.00
14.	பாவசங்கீர்த்தனத்தின் இரகசியம்	60.00	70.00
15.	சேசுவின் திருநாமத்தின் அதிசயங்கள்	35.00	40.00
16.	கற்பு என் பொக்கிஷம்	60.00	70.00
17.	என்னைப் படி அல்லது வருத்தப்பட்டு (உத்தரிக்கிற ஆன்மாக்கள் பற்றியது)		
18.	ஞான உணர்த்துதல்	40.00	45.00
19.	**Read Me or Rue It**	60.00	70.00
20.	என்னைப் படிக்காவிட்டால் நீ வருத்தப்படுவாய்	75.00	80.00
21.	கத்தோலிக்க வேத சத்தியங்கங்கள்	45.00	50.00
22.	இதுதான் பாத்திமா செய்தி, இதுவே பரிகார பக்தி	35.00	40.00
23.	ஞான சரீரம்	35.00	40.00
24.	சலேத் இரகசியம்	35.00	40.00
25.	மரியாயின் இரகசியம்	30.00	35.00
26.	தேவ இரகசிய ரோஜா மாதா காட்சிகள்	30.00	35.00
27.	**The Penny Catechism**	35.00	40.00
28.	அமலோற்பவ மாமரியின் போரணி	40.00	45.00
29.	அன்னையை நேசிக்க பன்னிரு படிகள்	30.00	35.00
30.	மரியாயின் மாசற்ற இருதய பரிகார பக்தி முயற்சிகள்		
31.	முத்துக்குளித் துறையின் முதல் ஆயர் (வந். ரோச் ஆண்டகையின் வரலாறு)	30.00	35.00
32.	மோட்சம், நரகம், உத்தரிக்கிற ஸ்தலம்	35.00	40.00
33.	வியாகுல மாதா பக்தி	35.00	40.00
34.	தலைவெள்ளி, முதல் சனி பக்தியும், ஜெபமாலையும் அனுசரிக்கும் முறை	20.00	25.00
35.	உத்தரிக்கிற ஸ்தலத்துக்கு அனுதின யாத்திரை		
36.	காவல் சம்மனசானவர்	10.00	10.00
37.	சிலுவைப்பாதை	15.00	1500
38.	பரிசுத்த ஆவி ஜெபம்	6.00	7.00
39.	சேசுவின் திரு இருதய மந்திரமாலை	6.00	7.00
40.	தேவமாதாவின் மந்திரமாலை		
41.	அர்ச். சூசையப்பர் பக்திமாலை	10.00	12.00
42.	அர்ச். சூசையப்பர் மகத்துவங்கள்	60.00	70.00
43.	ஆதித் திருச்சபையின் பத்து வேதகலாபனைகள்	10.00	12.00
44.	திருச்சபையின் கட்டளைகள் (சிறிய விளக்கத்துடன்)	10.00	12.00
45.	சேசுவின் இரக்க பக்தி	10.00	12.00
46.	அர்ச். பிலோமினம்மாள் ஜெபப் புத்தகம்	10.00	12.00
47.	தேவ அழைத்தல்கள்	35.00	40.00
48.	சின்னக் குறிப்பிடம்	10.00	12.00

		விலை ரூ.	தபாலில் விலை ரூ.
49.	அன்பிரவு (பரிகாரத் திருமணி ஜெபப் புத்தகம்)	25.00	30.00
50.	மனச்செபம் ஒரு விளக்கம்	35.00	40.00
51.	புதுநன்மைப் புனிதை (முத்திப்பேறு பெற்ற இமெல்டா வாழ்க்கை வரலாறு)	70.00	75.00
52.	பரலோக எச்சரிப்பு (2 புத்தகங்களின் தொகுப்பு - Fr.அந்தோனி சேவியர் தொகுத்து எழுதியது)	60.00	65.00
53.	ஜெபமாலையின் இரகசியம் (அர்ச். லூயிஸ் மோன்போர்ட் எழுதியது)	100.00	150.00
54.	மரியாயின் மாசற்ற இருதய வெற்றியின் உதயம்	35.00	40.00
55.	33 நாள் தயாரிப்பு: தேவமாதாவுக்கு முழு அர்ப்பணம் செய்யும் முறை (தியானங்களுடன்)	50.00	60.00
56.	இறுதிக்கால யுகம்	100.00	115.00
57.	அர்ச். பத்தாம் பத்திநாதர் வாழ்க்கை வரலாறு	100.00	115.00
58.	புதுமைப் புனிதர் தந்தை பியோ	200.00	220.00
59.	வேத விளக்கம் : ஆசிரியர் : வீரமாமுனிவர் (சங். ஜோசப் பெஸ்கி, சே.ச.)	150.00	160.00
60.	அன்பின் அரசர்	150.00	160.00
61.	நரகம்	60.00	65.00
62.	அர்ச். ரீத்தம்மாளின் ஜீவிய சரித்திரம்	12.00	15.00
63.	தேவமாதாவின் பிரார்த்தனை விளக்கம்	150.00	160.00
64.	புதிய நட்சத்திரம் பிலோமினா	60.00	65.00
65.	அர்ச். பாஸி மரிய மதலேனாள்	85.00	90.00
66.	அர்ச். ஜெர்த்ரூத்தம்மாள்	45.00	50.00
67.	ஜெபமாலை ஜெபிப்பது எப்படி?	10.00	12.00
68.	**A Brief History of St. Mary Magdalene de Pazzi, Carmelite and Mystic**	50.00	55.00
69.	புனித தெரெசம்மாள் சரித்திரம்	160.00	180.00
70.	கடவுள் மனிதனின் காவியம் (முதல் பாகம்)		
71.	கடவுள் மனிதனின் காவியம் (இரண்டாம் பாகம்)	350.00	410.00
72.	கடவுள் மனிதனின் காவியம் (மூன்றாம் பாகம்)		
73.	கடவுள் மனிதனின் காவியம் (நான்காம் பாகம்)	200.00	250.00
74.	கடவுள் மனிதனின் காவியம் (ஐந்தாம் பாகம்)		
75.	கடவுள் மனிதனின் காவியம் (ஆறாம் பாகம்)	350.00	410.00
76.	கடவுள் மனிதனின் காவியம் (ஏழாம் பாகம்)	350.00	410.00
77.	கடவுள் மனிதனின் காவியம் (எட்டாம் பாகம்)		
78.	கடவுள் மனிதனின் காவியம் (ஒன்பதாம் பாகம்)		
79.	கடவுள் மனிதனின் காவியம் (பத்தாம் பாகம்)	550.00	610.00

அன்பான வாசகர்களின் கவனத்திற்கு

1. மணியார்டர் பாரத்தில் உங்கள் தொலைபேசி / அலைபேசி எண்ணைக் குறிப்பிடுங்கள்.
2. மாதா பரிகார மலரை உங்களுக்குத் தெரிந்தவர்கள், உறவினர்கள், நண்பர்களுக்கு அறிமுகப்படுத்தி பரப்ப உதவுங்கள். (எங்களுக்கு உதவி செய்கிற உங்கள் அனைவரின் ஆன்ம சரீர நலன்களுக்காகவும் தினமும் எங்கள் ஜெபத்தில் வேண்டுகிறோம்.)
3. மாதா பரிகார மலர் ஆண்டு சந்தாவை இன்னும் புதுப்பிக்காதவர்கள் உடனே அதைப் புதுப்பித்து நம் பத்திரிகை நல்ல முறையில் வெளிவர எங்களுக்கு உதவும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். வருட சந்தா - ரூ. 150/- கூடுதல் தபால் செலவு ஆகிறது. நேயர்கள் உதவி செய்யும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.
4. மாதா பரிகார மலர் சாந்தா, காணிக்கை மற்றும் புத்தகங்களுக்கு மட்டும் கீழ்கண்ட பெயரில் உங்கள் மணியார்டர்கள், D.D.s. மற்றும் காசோலைகளை அனுப்புங்கள்.

A/c Name : SOCIETY OF APOSTLES OF MARY
No. 31423199505 - IFS Code : SBIN 0008145
State Bank of India, Kanthasamypuram Branch. Tuticorin

அனுப்ப வேண்டிய முகவரி :
மாதா அப்போஸ்தலர்கள் சபை,
ரோஸா மிஸ்திக்கா,

11/519 சகாயமாதா பட்டணம், 2-வது தெரு, வி.வி.டி மேல்நிலைப் பள்ளி எதிரில், தூத்துக்குடி - 628002.
போன் : 0461 2361989, அலைபேசி : 9487609983. Email : tutirosamystica@gmail.com
சந்தா, நன்கொடை செலுத்த : Google Pay 9487609983

நமது மாதா அப்போஸ்தலர்கள் சபைக்கு அனுப்பும் நன்கொடை மற்றும் காணிக்கைக்கு வரிசலுகை பெற்று கொள்ள ரசீது (80G - AAJT36976JF20215) பெற்றுக் கொள்ளமுடியும்

சேசு மரியாயில் அன்புள்ள நண்பர்களே, உபகாரிகளே,

நமது உலக ஜெயராக்கினி மாதா ஆலய கட்டிட வேலைகள் கடந்த ஐந்து ஆண்டுகளாக நடந்து வருகின்றன. சேசுவின் திருஇருதயத்திற்கும் (திவ்ய நற்கருணைக்கும்) மேலும், தேவ மாதா பாத்திமாவில் கேட்டுக் கொண்டபடி மரியாயின் மாசற்ற இருதய பரிகார பக்திக்கென்றும் இந்த ஆலயத்தை மிகுந்த முயற்சியுடன் உபகாரிகளின் உதவியினால் கட்டி வருகிறோம். தேவையான உதவிகள் கிடைக்காமையால் இக்கட்டிட வேலைகள் இன்னும் முடியவில்லை. நமது உலக ஜெயராக்கினி மாதா ஆலயத்தை முழுமையாக கட்டி முடிக்க கீழ்க்கண்ட வகைகள் தேவைப்படுகிறது.

01.	ரூப் (Roof) & கான்கிரீட் சென்ட்ரிங் கூலி	ரூ. 30,00,000.00
02.	பீடத்தின் மேல் (Center) டவர் கான்கிரீட் & சென்ட்ரிங் கூலி	ரூ. 9,00,000.00
03.	ஆலயத்தின் உள்பக்கம் & வெளிப்பக்கம் பூசுவதற்கு (Finishing Materials) பொருட்கள் & கூலி	ரூ. 10,00,000.00
04.	ரூப் (Roof) மேல் பக்கம் & உள்பக்கம் பூசுவதற்கு பொருட்கள் (Finishing materials) & லேபர் கூலி	ரூ. 12,50,000.00
05.	கூரை ஓடு பதிக்க பொருட்கள் & லேபர் கூலி	ரூ. 7,00,000.00
06.	ஆலயத்தின் முன் கோபுரம் (Front Tower) கட்டுவதற்கு பொருட்கள் (Finishing Materials) & லேபர் கூலி	ரூ. 7,50,000.00
07.	குருக்கள் தங்கும் இல்லத்திற்கு உள்பக்கம் & வெளிப்பக்கம் பூசுவதற்கு பொருட்கள் (Finishing Materials) & லேபர் கூலி	ரூ. 1,05,000.00
08.	தேக்கு மரம் நிலை & கதவு 9, ஜன்னல் 14 லேபர்&(Wood Polish)	ரூ. 17,50,000.00
09.	தரைக்கு (Floor) வெள்ளை மார்பிள் கல் & லேபர் கூலி	ரூ. 24,00,000.00
10.	எலெக்ட்ரிக்கல் சாமான்கள், (Fittings) விளக்குகள் & லேபர்கூலி	ரூ. 6,00,000.00
11.	ஆலயம் முழுவதற்கும் வர்ணம் பூச பொருட்கள் & லேபர் கூலி	ரூ. 12,00,000.00
12.	கண்ணாடி ஓவியங்கள் வேலை	ரூ. 9,00,000.00
13.	திவ்ய பலி பூசை நிறைவேற்ற (Main Altar) தேக்கு மர வேலை	ரூ. 9,25,000.00
14.	பீடத்தின் இருபுறமும் (Altar Side) தேக்கு மர வேலை	ரூ. 7,00,000.00
	ஆலயம் கட்டி முடிக்கத் தேவையான மொத்த செலவு	ரூ.1,61,80,000.00

இந்த ஆலயத்தைக் கட்டி முடிக்க மாதாவின் அன்புப் பிள்ளைகள் தங்களால் முடிந்த உதவி அளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

வங்கி விபரம்
Account Name:
Society of Apostles of Mary
Account No. 121802000000473
IFS Code: IOBA0001218
Indian Overseas Bank,
Mappillaiyurani Branch, Thoothukudi.

இவண்,
மாதா அப்போஸ்தலர்கள் சபை மற்றும்
மாதா அப்போஸ்தலர்கள்
Address:
மாதா அப்போஸ்தலர்கள் சபை,
(Society of Apostles of Mary)
11/519, சகாயமாதாபட்டணம், 2வது தெரு,
தூத்துக்குடி – 628 002. தொலைபேசி: 0461 2361989
அலைபேசி: 94876 09983, 94872 57479
E-mail: tutirosamystica@gmail.com

உலக ஜெயராக்கினி மாதா ஆலயம்



ஆலயத்தின் முழுத்தோற்றம்



கட்டிடப் பணி நடைபெறும் ஆலயத்தின் தோற்றம்

முகவரி

மாதா அப்போஸ்தலர்கள் சபை,

(Society of Apostles of Mary)

11/519, சகாயமாதாபட்டணம், 2வது தெரு,

தூத்துக்குடி – 628 002. தொலைபேசி: 0461 2361989

அலைபேசி: 94876 09983, 94872 57479

E-mail: tutirosamystica@gmail.com

வங்கி விபரம்

Account Name: Society of Apostles of Mary

Account No. 121802000000473

IFS Code: IOBA0001218

Indian Overseas Bank,

Mappillaiyurani Branch, Thoothukudi.

அர்ச். குழந்தை சேசு தெரசம்மாள் ஜெபம்



ஓ! குழந்தை சேசுவின் சிறிய புஷ்பமாகிய அர்ச். தெரசம்மாளே, நீர் இப்பூவுலகில் சீவித்த சொற்ப காலத்தில் சம்மனசுகளுக்குரிய பரிசுத்ததனத்தின் கண்ணாடியாகவும், சிநேகத்தின் தர்ப்பணமாகவும், தேவ பராமரிப்புக்கு அமைந்த தகனப்பலியாகவும் விளங்கினீரே! உமது புண்ணியங்களின் பலனைச் சுகிக்கும் இவ்வேளையில் ஏழை என் மீது உமது கருணைக் கண்ணைத் திருப்பியருளும். நான் சகலத்தையும் உமது கரங்களில் ஒப்படைக்கிறேன். என்னுடைய சஞ்சலங்களை உம்முடையவைகளாக ஏற்றுக் கொண்டு ஜென்ம மாசணுகாத திருத்தாயாரிடம் எனக்காகப் பரிந்து பேசியருளும். அந்தத் தாய்க்கு உமது மட்டில் உள்ள அன்பினால் மோட்ச இராக்கினியாகிய அவர்கள் முகமலர்ந்து உம்மை நோக்கவும், அவர்களது தரிசனத்தை நீர் காண்கவும் பாக்கியம் பெற்றீரே! சேசுவின் திரு இருதய இராக்கினியாகிய அந்தத் தாய் தமது வல்லபம் மிகுந்த மன்றாட்டினால் நான் இந்த வேளையில் ஆவலுடன் ஆசிக்கிற வரத்தை எனக்கு அடைந்து தரும்படியாகவும், என்னுடைய சீவிய காலத்தில் என்னைத் திடப்படுத்தி மரண வேளையில் என்னைத் தற்காத்து, என்னை நித்திய பாக்கியத்துக்கு நேராய் இட்டுக் கொண்டு போவதற்கான ஆசீர்வாதத்தை அளிக்கும்படியாகவும் அவரைப் பார்த்து மன்றாட உம்மைப் பிரார்த்திக்கிறேன், ஆமென்.

திருநாள்: அக்டோபர் 03

MATHA PARIKARA MALAR
ROSA MYSTICA
(Opp. V.V.D. H. Sec. School)
SAHAYAMATHAPATTANAM
TUTICORIN - 628 002.
PH: 0461 - 2361989
Cell: 94876 09983
E-mail: tutirosamystica@gmail.com

மாதா பரிகார மலர்
ரோஸா மிஸ்திக்கா
வி.வி.டி. மேல்நிலைப்பள்ளி எதிரில்,
சகாயமாதாபட்டணம்
தூத்துக்குடி மேலூர் போஸ்ட் – 628 002
போன்: 0461 – 2361989
அலைபேசி: 94876 09983

To

Printed, Published and owned by: S. Michael Joseph Kennedy , Managing Trustee cum Secretary of Society of Apostles of Mary & Keeper of Mathavin Susai Achagam (Printing Press), 11/519, 2nd Street, Sahayamathapattanam, Melur (P.o), Tuticorin District, Tamil Nadu.

Printed at: Mathavin Susai Achagam (Printing Press), C/o, Society of Apostles of Mary, D.No 11/510, 2nd Street, Sahayamathapattanam, Melur (P.o), Tuticorin - 628 002. Tuticorin Dist., Tamil Nadu.

Published at: Society of Apostles of Mary, 11/510-1, Rosamystica 2nd Street, Sahayamathapattanam, Melur (P.o), Tuticorin - 628 002. Tuticorin Dist., Tamil Nadu.

Editor: Sammanasu Navis, C/o, Society of Apostles of Mary, 11/519, 2nd Street, Sahayamathapattanam, Melur (P.o), Tuticorin - 628 002. Tuticorin Dist., Tamilnadu.